அலகு
4

# தமிழர் கலைகள்

ABLA7H

## கற்றல் நோக்கங்கள்

- தமிழர் கலைகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- கோயில் அமைப்பின் தத்துவத்தைத் தெரிந்து கொள்ளுதல்
- சிற்பக் கலையின் வகைகளை அறிந்து கொள்ளுதல்.
- ஓவியங்களின் வாயிலாகப் பழங்காலச் செய்திகளைப் புரிந்து கொள்ளுதல்.
- இசைத்தமிழின் பெருமைகளை அறியச் செய்தல்.
- நடனக் கலையின் சிறப்புகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- தமிழகக் கோயில் கலை நுட்பங்களையும் தொழில் நுணுக்கங்களையும் அறிந்து கொள்ளுதல்.
- தமிழர்களின் வீரவிளையாட்டுகளைத் தெரிந்து கொள்ளுதல்.

## நுழைவு வாயில்

மனித நாகரிகத்தின் வளர்ச்சி நிலையே கலைகளின் வெளிப்பாடுகள். தமிழர் தம் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த, கலைகள் வாயில்களாக அமைந்தன. தொடக்க நிலையில், அவர்கள் மேற்கொண்ட ஒவ்வொரு தொழிலுமே கலையாக உருவெடுத்தது. மணிமேகலைக் காப்பியம், கலைகளை அறுபத்து நான்கு எனக் குறிப்பிட்டுள்ளது.

இப்பாடப்பகுதியில், கலைகள் பற்றிய அறிமுகம், அழகுக் கலைகளின் வகைகள், காலந்தோறும் தோன்றிய புதிய கலைகள், அவற்றைத் தமிழர்கள் போற்றி வளர்த்த முறைகள் முதலான செய்திகள் விளக்கமாகக் கூறப்படுகின்றன.

கலைகள் ஒரு நாட்டின் பன்முகப் பண்பாட்டு அடையாளங்களாகத் திகழ்கின்றன. மக்களின் பழக்கவழக்கம், வாழ்வியல் முறை மற்றும் பொருளாதார நிலையை வெளிப்படுத்தும் விதமாகக் கலைகள் அமைகின்றன. தமிழகத்தில் அறுபத்து நான்கு முதன்மைக் கலைகள் இருந்தன இதை 'ஆய கலைகள் அறுபத்து நான்கனையும் ஏய உணர்விக்கும் என் அம்மை' என்ற கம்பரின் கூற்று தெரிவிக்கின்றது. மனிதனின் வாழ்விற்குப் பயன்படும் அனைத்துமே கலைகள். இவை பொதுக் கலைகள், அழகுக் கலைகள் என இரண்டு வகைப்படும். காட்சி இன்பம், கேள்வி இன்பம் தருவன அழகுக்கலைகள். கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என அழகுக்கலைகளை ஐந்தாகப் வகைப்படுத்தித் தமிழறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி கூறியுள்ளார்.

## கட்டடக் கலை (Architecture)

தமிழகத்தில் உள்ள வீடு, மாளிகை, அரண்மனை, கோயில்கள் போன்றவை தமிழகக் கட்டட கலைக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. இவற்றுள் கோயில்களே காலத்தைக் கடந்து தமிழரின் கட்டடக் கலைக்குச் சான்றுகளாக இன்றளவும் திகழ்கின்றன. சங்ககாலம் தொட்டே முறையாகக் கட்டடங்களை அழகுற அமைப்பதற்கான 'மனை நூல்கள்'




Unit 4.indd 56 13-02-2020 20:12:53

இருந்தன. இதனை 'நூலோர் சிறப்பின் முகில் தோய் மாடம்' என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.

### மரக்கட்டடங்கள்

பழங்காலத்தில் கோயில்கள் மரத்தினால் கட்டப்பட்டன. இதற்குச் சான்றாகச் சிதம்பரம் நடராசர் கோயிலில் உள்ள சபாநாயகர் மண்டபத்தை இன்றும் காணலாம். மரக்கட்டடங்கள் இயற்கையினால் அழிந்துவிடும் தன்மை உடையன. இதன் மேற்பகுதி விரைவில் பழுதாகிவிடும். அதனால் இவை செம்பு, வெள்ளி, பொன் தகடுகளால் வேயப்பட்டன. மரக்கட்டடங்களோடு களிமண் கட்டடங்களும் தோன்றின. களிமண் கட்டடங்களின் மேற்கூரைகள் மரத்தால் வேயப்பட்டு இருந்தன. பின்னர், மரக்கட்டடங்களும் களிமண் கட்டடங்களும் சுடுமண்ணால் கட்டப்பட்ட உயர்ந்த கட்டடங்களாக மாறின.



**சிதம்பரம் நடராஜர் கோயில் பொன் கூரை**

### செங்கல் கட்டடங்கள்

சங்க காலத்தில் இருந்தே சுட்ட செங்கற்களால் ஆன கட்டடங்களைத் தமிழகத்தில் காணலாம். செங்கற் கோயில்கள் மரக் கோயில்களைவிட உறுதியாகவும் நீடித்த தன்மை உடையனவாகவும் விளங்கின. கி.பி.(பொ.ஆ.) ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கோயில்கள் எல்லாம் செங்கல் கட்டடங்களாகவே இருந்தன. இவை மன்னர்களால் அவ்வப்போது செப்பனிடப்பட்டன.



**அரியலூர் செங்கற்கோயில்**

### குடைவரைக் கோயில்கள்




**மண்டகப்பட்டு குடைவரைக் கோயில்**

பெரிய பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டவை குடைவரைக் கோயில்கள் ஆகும். இவை கருவறை, முன் மண்டபம், தூண்கள் என்ற அமைப்பைக் கொண்டிருந்தன. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மண்டகப்பட்டு என்னுமிடத்தில் கி.பி.(பொ.ஆ.) ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன், முதல் குடைவரைக் கோயிலை அமைத்தான். முற்காலப் பாண்டியர்கள் அமைத்த முதல் குடைவரைக் கோயில் பிள்ளையார்பட்டி குடைவரைக் கோயில் ஆகும். குடைவரைக் கோயில்கள் நீண்ட மண்டபம் போன்ற அமைப்பைப் பெற்றிருந்தன. எனவே 'மண்டபக் கோயில்கள்' என்றும் பாறைகளைக் குடைந்து அமைத்ததால் 'பாறைக் கோயில்கள்' என்றும் அழைக்கப்பட்டன.



Unit 4.indd 57 13-02-2020 20:12:53



**மாமல்லபுரம்**

ஒரே கல்லினால் ஆன ஒற்றைக்கற் கோயில்கள் தமிழகத்தில் காணப்படுகின்றன. இவற்றை அமைக்க, பாறைகளை மேலிருந்து படிப்படியாகக் கீழே செதுக்கிக் கோயில்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் மாமல்லபுரத்தின் மகிசாசுரமர்த்தினி கோயிலின் முன் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாமல் உள்ள ஒற்றைக்கல் கோயில் இதற்குச் சான்றாகும்.

## கற்றளிகள்

கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிச் சுண்ணம் சேர்க்காமல் கட்டப்படும் கட்டடங்களுக்குக் 'கற்றளிகள்' என்று பெயர். கி.பி ஏழாம் நூற்றாண்டில் நரசிம்மவர்மன் காலத்தில் கற்றளி அமைக்கும் முறை ஏற்பட்டது. மாமல்லபுரம், காஞ்சிபுரம், பனமலை ஆகிய ஊர்களில் காணப்படும் கற்றளிகள் காலத்தால் முந்தியவை. கி.பி.(பொ.ஆ.) எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய கட்டடங்களில், பெரும்பான்மை கற்றளிகளாகவே இருந்தன. பிற்காலச் சோழர்கள் செங்கற்களால் ஆன பழைய கோயில்களைக் கற்றளிகளாக மாற்றினர்.



**மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்**

## திராவிடக் கட்டடக்கலை

இந்தியக் கோயில் கட்டடக்கலை நாகரம், வேசரம், திராவிடம் என மூன்று வகைப்படும். சிகரத்தின் அமைப்பானது நான்கு பக்கங்களைக் கொண்டு சதுரமாக அமைந்திருந்தால் அந்த விமானம் 'நாகரம்' எனப்படும். இதுவே, வட இந்திய கட்டடக்கலையாகும். சிகரம் வட்டவடிவமாக இருப்பின் அந்த விமானம் 'வேசரம்' எனப்படும். இவை, இந்தியாவின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள பௌத்த சமயக் கட்டடக் கலையாகும். சிகரமானது எட்டுப்பட்டை அமைப்புடன் இருந்தால் அந்த விமானம் 'திராவிடம்' எனப்படும். திராவிடம் என்பது தென்னிந்தியக் கோயில் கட்டடக் கலை ஆகும். வடக்கே கிருஷ்ணா நதி முதல் தெற்கே குமரி வரை திராவிடக்கலை பரவியுள்ளது.



**பூரி ஜெகநாதர் கோயில்**

மேலும், இக்கட்டடக்கலை இலங்கை, பர்மா, மலேசியா, கம்போடியா போன்ற நாடுகளிலும் பரவியுள்ளது. தமிழகக் கட்டடக் கலையை பல்லவர், பாண்டியர், சோழர், விஜயநகர, நாயக்கர் ஆகியோரின் காலக்கட்டத்தவை எனத் தனித்தனியாக வகைப்படுத்தலாம்.

## விமானம்




**திருவதிகை கோயில் விமானம்**



Unit 4.indd 58 13-02-2020 20:12:54

இந்துக் கோயில்களில் கர்ப்பக்கிரகம் என்னும் கருவறையின் மீது அமைக்கப்படும் பிரமிடு போன்ற கட்டடக்கலையை விமானம் என்பர். விமானத்தைப் பொதுவாக 'ஷடங்க விமானம்' என்பர். ஷடங்க விமானம் என்பது, ஆறு உறுப்புகளைக் குறிக்கும். அவை மனித உடலின் உறுப்புகளுடன் ஒப்புமையுடையவையாகும்.




**கோயில் விமானம்**

1. அதிட்டானம் - பாதம்
2. பித்தி - கால்
3. பிரஸ்தரம் - தோள்
4. கண்டம் - கழுத்து
5. சிகரம் - தலை
6. ஸ்தூபி - மகுடம்

விமானத்தின் மீது பெரும்பாலும் ஒரேயொரு கலசம் மட்டும் இடம்பெற்றிருக்கும். இவ்விமானங்கள் சோழர் காலத்தில்தான் மிக உயரமானவையாக அமைக்கப்பட்டன.

## கோபுரம்

கோயில் உறுப்புகளில் மிக முக்கியமானதும் அழகுடையதுமாக விளங்குவது கோபுரம். 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பர். இக்கோபுரம் சுற்றுப்புறச் சுவரில் ஊடறுத்துச் செல்லும் நுழைவாயிலின் மேல் கட்டப்பட்டதாகும். கோபுரத்தின் உச்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட கலசங்கள் இடம்பெற்றிருக்கும்.



**சாரங்கபாணி கோயில் கோபுரம் – கும்பகோணம்**

கோயில்களில் கோபுரம் அமைத்தல் பல்லவர் காலத்தில் தொடங்கி, விஜயநகர மன்னர்கள் காலத்தில் மிகவும் உன்னத நிலையை அடைந்தது எனலாம்.

இராஜசிம்மன் காலத்தில் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயிலில்தான் முதன்முதலாகச் சிறுகோபுரம் அமைக்கப்பட்டது. பல்லவர்களும், சோழர்களும் விமானத்திற்கு முக்கியத்துவம் அளித்தனர். விஜயநகர மற்றும் நாயக்கர் காலத்தில் விமானங்களைச் சிறியனவாகவும், கோபுரங்களைப் பெரியனவாகவும் அமைத்தனர். கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்தில்தான் மிக உயர்ந்த கோபுரங்களை அமைக்கத் தொடங்கினார். இவர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம் போன்ற இடங்களில் பெரிய கோபுரங்களை அமைத்தார். பிற்காலத்தில் இவை 'இராஜ கோபுரம்' என்று அழைக்கப்பட்டன.

## பல்லவர் காலக் கட்டடக்கலை

பல்லவர்கள், காஞ்சிபுரத்தைத் தலை நகராகக் கொண்டு தமிழகத்தை முந்நூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். இவர்கள் மரம், சுதை, உலோகம், செங்கல் போன்ற கட்டுமானப் பொருள்கள் இன்றிக் காலத்தால் அழிக்க இயலாத குடைவரைக் கோயில்களை உருவாக்கினர்.



சாளுவன்குப்பம் – புலிக்குகை

மண்டகப்பட்டு, பல்லாவரம், மாமண்டூர், வல்லம், மகேந்திரவாடி, சீயமங்கலம், தளவானூர், திருச்சி ஆகிய பகுதிகளில் பழைமையான பல்லவர் காலத்துக் கோயில்கள் உள்ளன. இவற்றில் மகேந்திரவர்மன் காலத்தைச் சேர்ந்த கோயில்கள் மிகவும் தொன்மையானவை. மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. 'சாளுவன் குப்பத்தில்' உள்ள குகைக்கோயிலில் வெளிமுகப்பு முழுவதும் யாளியின் முகம் செதுக்கப்பட்டுள்ளது. இது குகைக்கோயில்களின் அமைப்பிலேயே வியக்கத்தகு வடிவை உடையது. இப்பகுதி, தற்காலத்தில் 'புலிக்குகை' என்று அழைக்கப்படுகிறது.



கைலாசநாதர் கோயில் – காஞ்சிபுரம்

பல்லவர்கள் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக்கல் இரதங்கள் அமைத்ததோடு அன்றிக் கட்டுமானக் கோயில்களையும் எழுப்பியுள்ளனர். இவற்றுள், அழகும் தொன்மையும் வாய்ந்தது காஞ்சி கைலாசநாதர் கோயில். இது ராஜசிம்மனால் கட்டப்பட்டது.

## பாண்டியர் காலக் கோயில்கள்

பல்லவர்கள், தமிழகத்தின் வட பகுதியை ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில், தென் பகுதியைப் பாண்டியர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். செழியன்சேந்தன் காலம்முதல் வீரபாண்டியன் காலம்வரை அவர்கள் தோற்றுவித்த குடைவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்றளிகள், கட்டடக் கோயில்கள் ஆகியன பாண்டியர்கள் காலக் கட்டடக் கலைக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

தமிழகத்தில் பாண்டியர்களின் குடைவரைக் கோயில்கள் சிற்பங்கள் மிகுந்து அழகுடன் காணப்படுகின்றன. பிள்ளையார்பட்டி, மலையடிக்குறிச்சி, ஆனைமலை, திருப்பரங்குன்றம், குன்றக்குடி, திருமயம், குடுமியான்மலை, சித்தன்னவாசல், மகிபாலன்பட்டி, பிரான்மலை, அழகிய பாண்டியபுரம், மூவரைவென்றான் போன்ற ஊர்களில் பாண்டியர்கள்காலக் குடைவரைக் கோயில்களைக் காணலாம்.



வெட்டுவான் கோயில் – கழுகுமலை

கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயில்' பாண்டியரது ஒற்றைக் கற்றளிக்குச் சான்றாகும். இது மலையின் மேலிருந்து கீழ்நோக்கிக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளது. இது 'தென்னகத்து எல்லோரா' என்று அழைக்கப்படுகிறது. திருப்பத்தூர் திருக்கற்றளிநாதர் கோயில் பாண்டியர் காலக் கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.



Unit 4.indd 60 13-02-2020 20:12:54

## சோழர்காலக் கோயில்கள்

தமிழகக் கட்டடக்கலை வரலாற்றில் பிற்காலச் சோழர் காலம் பொற்காலமாகும். விஜயாலயசோழன் முதல் மூன்றாம் இராஜராஜசோழன் வரையிலான மன்னர்கள், அழகு வாய்ந்த எண்ணற்ற கோயில்களை எழுப்பினர். செங்கற்களால் கட்டப்பட்ட கோயில்களை எல்லாம் கருங்கற்களாலான கோயில்களாக மாற்றி அமைத்தனர். விஜயாலயசோழனால் கட்டப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலைக் கோயில் தனித்தன்மை வாய்ந்தது. இக்கோயிலின் வெளிச்சுவர் சதுர வடிவிலும் உட்சுவர் வட்ட வடிவிலும் உள்ளது.



**நார்த்தாமலைக் கோயில்**

'ஆதித்தசோழன்' காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஏராளமான கற்கோயில்களைக் கட்டினார். இக்கோயில்கள் இன்றும் நிலைத்து நிற்கின்றன. 'பராந்தகசோழன்' எழுப்பிய பிரம்மபுரீசுவரர் கோயில், எறும்பூர் கடம்பவனேசுவரர் கோயில் ஆகியன சோழர் காலக் கட்டடக்கலையின் எழிலையும் எளிமையையும் விளக்குவன. சோழர் காலக் கட்டடக் கலையில் 'செம்பியன்மாதேவியின்' பங்கு குறிப்பிடத்தக்கது. இவர் பாடல் பெற்ற பல தலங்களைக் கற்றளிகளாக மாற்றியமைத்துப் பெரும் பொருள்களை வழங்கினார். இராஜராஜசோழன் எழுப்பிய தஞ்சைப் பெரியகோயில் 'தென்னகத்தின் மேரு' என அழைக்கப்படும் சிறப்பைப் பெற்றது. இக்கோயிலே தமிழகக் கட்டடக் கலையின் மணிமகுடமாக விளங்குகின்றது. தஞ்சையின் சுற்று வட்டாரப் பகுதிகளில் கருங்கற்களே இல்லாத நிலையில் முற்றிலும் கருங்கற்களைக் கொண்டே 216 அடி உயரமும் 13 அடுக்குகளையும் கொண்ட விமானத்தை அமைத்து 'இராஜராஜேசுவரம்' எனப் பெயரிட்டார் இராஜராஜன். இதன் முதல் வாசல் 'கேரளாந்தகன் திருவாசல்' என்றும், இரண்டாம் வாசல் 'இராஜராஜன் திருவாசல்' என்றும் அழைக்கப்படுகின்றன.

இக்கோயிலின் உச்சியில் உள்ள எண்கோண வடிவிலான சிகரம் 80 டன் எடை கொண்டது. இதனை, 1987ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பு (The United Nations Educational, Scientific and Cultural Organisation – UNESCO) உலகப் பாரம்பரிய சின்னமாக அறிவித்தது.



**தஞ்சைப் பெரிய கோயில்**

**உங்களுக்குத் தெரியுமா?**

மிக உயரமான விமானத்தை உடைய தமிழகக் கோயில்கள்:

தஞ்சைப் பெரிய கோயில் – 216 அடி உயரம்- முதலாம் இராஜராஜ சோழன்

கங்கை கொண்ட சோழபுரம் – 170 அடி உயரம் – முதலாம் இராஜேந்திர சோழன்

திரிபுவனம் கம்பகரேசுவரர் கோயில் - 126 அடி உயரம் – மூன்றாம் குலோத்துங்க சோழன்



Unit 4.indd 61 13-02-2020 20:12:55



**கங்கை கொண்ட சோழபுரம்**

இராஜேந்திரசோழன் தனது கங்கைப் படையெடுப்பு வெற்றியின் சின்னமாகக் 'கங்கை கொண்ட சோழபுரம் கோயிலை அமைத்தார். இது 170 அடி உயரம் கொண்டது. இக்கோயில் சிற்பக் களஞ்சியமாக விளங்குகின்றது.

## விஜயநகரப் பேரரசர் காலம் மற்றும் நாயக்கர் காலம்

விஜயநகரப் பேரரசின் காலத்தில் தமிழகக் கட்டடக்கலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. சோழர், பாண்டியர் காலக் கட்டடக்கலையின் தொடர்ச்சியாகவே விஜயநகரப் பேரரசுக் காலக் கட்டடக்கலை விளங்குகிறது. ஆனால் நுட்பமான அலங்கார வேலைப்பாடுகள் இக்காலக் கட்டடக்கலையின் சிறப்புக் கூறுகளாகும். இக்கோயில்களில், விமானங்கள் சிறியதாகவும், கோபுரங்கள் உயரமாகவும் உள்ளன. திருவண்ணாமலை, மதுரை, இராமேசுவரம் ஆகிய ஊர்களில் உள்ள கோயில் கோபுரங்கள் இக்காலத்தவையாகும்.



**ஜலகண்டேஸ்வரர் கோயில் – வேலூர்**

நாயக்கர் காலக் கட்டடக்கலை விஜயநகரக் காலக் கட்டடக்கலையைப் பின்பற்றியே எழுந்தது.



**மதுரை நாயக்கர் மஹால்**

நூறுகால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் எழுப்புதல் இவர்களின் தனிச் சிறப்பு. திருமலை நாயக்கர் மகால், இராமேசுவரம் இராமநாதசாமி கோயில் ஆயிரங்கால் மண்டபம், மதுரை மீனாட்சியம்மன் கோயில் புது மண்டபம், திருச்சி மலைமீது கட்டப்பட்டுள்ள தாயுமானவர் கோயில் ஆகியன இவர்களின் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். தமிழர் கட்டடக்கலையின் நெடிய வரலாறு தமிழர் தம் பழைமையையும் வளமையையும் உலகிற்குப் பறைசாற்றுகின்றன.



**திருவரங்கம் குதிரை மண்டபம்**

உங்களுக்குத் தெரியுமா?

தமிழகத்தில் ஆயிரங்கால் மண்டபங்கள் அமைந்துள்ள கோயில்களில் குறிப்பிடத்தக்கவை:

மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருவரங்கம் அரங்கநாதர் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில், இராமேஸ்வரம் இராமநாத சுவாமி கோயில்

## சிற்பக்கலை (Sculpture)

### சங்ககாலம்

நடுகற்கள், சிற்பக்கலையின் தோற்றுவாயாகக் கருதப்படுகின்றன. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு முதலானவற்றில் நடுகல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. 'நடுகல்' என்பது, போரில் வீரமரணமடைந்த அல்லது மக்களுக்காக உயிர் துறந்த வீரனின் பெயரும் பெருமையும் எழுதி நட்டுவைத்து வழிபடும் கல் ஆகும். இது 'வீரக்கல்' அல்லது 'நினைவுக்கல்' என்றும் அழைக்கப்படும். தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்த நடுகல் வழிபடும் முறை, பிற்காலத்தில் வீரர்களின் உருவத்தைச் செதுக்கி வழிபடும் முறையாக வளர்ந்தது. தெய்வங்களுக்குச் சுதை உருவங்கள் செய்து வழிபட்டனர். இதுவே, கல்லில் சிற்பம் செய்யும் கலையாக வளர்ச்சி பெற்றது. விழாக்காலங்களில் களிமண்ணால் விலங்குகள் மற்றும் மனிதர்களின் உருவங்களைச் செய்து வைத்து வழிபடுவது கதிரை எடுப்பு, உருவாரம் எனப்படும். கல்லினால் செய்யப்படுவது கற்சிற்பங்கள் எனவும் உலோகத்தினால் செய்யப்படுவது படிம உருவங்கள் என்றும் அழைக்கப்படும்.

சங்க காலத்தில் மரச்சிற்பங்கள் அமைக்கப்பட்டதைப் பரிபாடல் மூலம் அறியலாம் கொற்கை, அரிக்கமேடு, உறையூர் போன்ற இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளில் அக்காலச் சுடுமண் ஓடுகளும் சிற்பங்களும் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த சுதைச்சிற்பங்களை இந்திர விழாவில் கூடிய மக்கள் கண்டு மகிழ்ந்தனர் என மணிமேகலை காப்பியம் எடுத்துரைக்கின்றது. சிற்பக் கலைஞர்களை 'மண்ணீட்டாளர்' என அழைக்கும் வழக்கம் இருந்ததை மணிமேகலையின் (28:37) மூலம் அறியலாம். கி.பி.(பொ.ஆ.) மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி.(பொ.ஆ.) பத்தாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பௌத்த சமண சமயங்கள் பரவி இருந்தன. தொடக்க காலத்தில் பௌத்தர்கள் பாதபீடிகை, தருமச்சக்கரம் முதலியவற்றை வைத்து வணங்கினர். பின்னரே புத்தர் திரு உருவங்களை வணங்கும் முறை தோன்றியது. சமண சமயத்தில் அருகப்பெருமானின் உருவத்தையும் தீர்த்தங்கரர்களின் உருவங்களையும் வணங்கினர்.

உங்களுக்குத் தெரியுமா?

"சுதை என்பது சுண்ணாம்பை நன்கு அரைத்துக் கரும்புச்சாறு, வெல்லச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு முதலியவற்றைக் கலந்து அரைத்து வச்சிரம் போல் செய்து அதைக் கொண்டு உருவங்கள் செய்வது" என அ. தட்சிணாமூர்த்தி குறிப்பிடுகிறார்.

### சிற்பங்கள்

இயற்கை உருவங்களையும் கற்பனை உருவங்களையும் வடிப்பது சிற்பக்கலை எனப்படும். கல், சுதை (சுண்ணாம்புக் காரை), மரம், மெழுகு, அரக்கு, தந்தம், உலோகம் ஆகியவற்றால் சிற்பங்கள் வடிக்கப்படுகின்றன. இவற்றைப் புடைப்புச்சிற்பங்கள், தனிச்சிற்பங்கள் என வகைப்படுத்துவர். கல், மரம், சுவர், பலகை போன்றவற்றில் புடைப்பாக உருவத்தின் முன்புறம் மட்டும் தெரியும்படி அமைக்கப்படும் சிற்பம் புடைப்புச்சிற்பம் எனப்படும். ஓர் உருவத்தின் முன்புறமும் பின்புறமும் முழுவடிவமாக வடித்தல் தனிச்சிற்பம் எனப்படும்.



Unit 4.indd 63 13-02-2020 20:12:55



**சுவர் புடைப்புச் சிற்பம்**

**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழகத்தில் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலையைப் பயிற்றுவிக்கும் அரசு கல்லூரி மாமல்லபுரத்தில் உள்ளது.



**தனி உருவச் சிற்பம் – புத்தர்**

தமிழ்நாட்டுச் சிற்பக்கலை, கோயில்களை அடிப்படையாகக்கொண்டுவளர்த்தெடுக்கப்பட்டது. தொடக்ககாலச் சிற்பங்கள் மரத்தினாலும் சுதையினாலும் செய்யப்பட்டவை. இப்பொழுதும் அத்தகைய சிற்பங்களைக் காணலாம். எடுத்துக்காட்டாக சுந்தர வரதராஜப்பெருமாள் கோயிலில் உள்ள கடவுள் உருவங்கள் மரத்தால் செய்யப்பட்டவையாக உள்ளன. திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள், காஞ்சி பாண்டவதூதப் பெருமாள் முதலிய உருவங்கள் சுதையினால் செய்யப்பட்டவை. கல்லினால் சிற்பம் அமைக்கும் முறை பல்லவர் காலத்திலும், உலோகத்தினால் சிற்பம் அமைக்கும் முறை பிற்காலச் சோழர் காலத்திலும் பின்பற்றப்பட்டன.

## பிரதிமைகள்

தனிப்பட்ட ஒருவரின் உருவஅமைப்பை உள்ளது உள்ளவாறே அமைப்பது பிரதிமைகள் எனப்படும்.பிரதிமைஉருவங்களில்பழைமையானது பல்லவ அரசர் உருவங்கள் ஆகும். உலோகங்களினால் பிரதிமைகள் அமைக்கும் வழக்கம் சோழர் காலத்தில் தோன்றியது.



**உலோகப் பிரதிமை**

## பல்லவர் காலம்

பல்லவர் காலம், கோயில் சிற்பக்கலையின் தொடக்க காலம் எனலாம். பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்துக் கோயில்களில் உள்ள துவாரபாலகர்கள் என்று அழைக்கப்படும் வாயிற்காவலர்களின் உருவங்கள் புடைப்புச்சிற்பங்களாக உள்ளன. இவையே தமிழகத்தில் காணப்படும் முதல் கற்சிற்பங்களாகும். இவர் காலத்தில் வாயிற்காவலர்களின் சிற்பங்கள் மட்டுமே கற்களால் உருவாக்கப்பட்டவை. கருவறையில் உள்ள சிற்பங்கள் மரத்தாலோ சுதையாலோ

செய்யப்பட்டிருந்தன. பல்லவர் காலத்தில் கடவுள் போலவே அரசன் அரசி உருவங்களையும் உயரமாகச் செதுக்கும் வழக்கம் இருந்தது.



**பல்லவர்காலச் சிற்பம்**

மாமல்லபுரத்தில் கோவர்த்தன மலை மண்டபத்தின் அருகில் 96 அடி அகலமும் 43 அடி உயரமும் கொண்ட பாறை உள்ளது. இப்பாறையின் இடையில் இயற்கையாகவே கீழ் நோக்கிய பள்ளம் காணப்படுகிறது. சிற்பிகள் இந்த இயற்கையான வடிவமைப்பைப் பயன்படுத்தித் தம் கற்பனையையும் கலந்து 'பகீரதன் தவம்' என்ற சிற்பத்தொகுதியாக வடிவமைத்துள்ளனர். கங்கை பூமிக்கு வர பகீரதன் சிவபெருமானை நோக்கித் தவமிருக்கும் காட்சியும், அந்தத் தவத்தின் பயனாகக் கங்கை பூமிக்கு வரும் நிகழ்வையும் அப்பாறைப் பகுதியில் வடிவமைத்துள்ளனர். இவர்கள் காலத்தில் புராணச்செய்திகளைச் சிற்பங்களாக வடிவமைத்துள்ளனர். நாமக்கல்லில் உள்ள மலைக்கோட்டையின் இருபுறமும் மகேந்திரவர்மன் காலத்துக் குடைவரைக் கோயில்கள் காணப்படுகின்றன. மலையின் கிழக்குப் பகுதியில் பள்ளி கொண்ட பெருமாள் கோயிலும், மேற்குப் பகுதியில் நரசிம்மப் பெருமாள் கோயிலும் உள்ளன. ஒரே மலையில் இரண்டு குடைவரைக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பு அம்சமாகும். இதன் சிற்பங்கள் நுண்ணிய வேலைப்பாட்டுடன் கூடியவை. இங்கு திருமாலின் பத்து அவதாரங்களும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர்கள் காலத்து ஒற்றைக்கல் இரதங்கள், கோயில் சிற்பங்கள் போன்றவை தனித்துவமானவையாக உள்ளன.

**உங்களுக்குத் தெரியுமா?**



ஆந்திராவில் உள்ள அனந்தப்பூர் மாவட்டத்தில் லெபாஷி என்ற ஊரிலுள்ள நந்தி சிற்பம் ஒரே கல்லால் வடிக்கப்பட்டது. இதுவே, உலகின் மிகப்பெரிய நந்தியாகும்.

## சோழர் காலம்

பல்லவர் காலச்சிற்பங்களின் வளர்ச்சியுற்ற நிலையே சோழர் காலச் சிற்பங்களாக இருந்தன. பல்லவர் காலத்தில் தாழ்ந்த புடைப்புச்சிற்பங்களாக அமைக்கப்பட்டிருந்தவை, சோழர் காலத்தில் உயர்ந்த புடைப்புச்சிற்பங்களாகவும் முழு உருவச்சிற்பங்களாகவும் அமைக்கப்பட்டன. சோழர் காலத்தில் இச்சிற்பக்கலை உயர்ந்த நிலையை அடைந்தது. இக்காலகட்டத்தில் தமிழகத்தில் மட்டுமன்றி கஜுராகோ, உதயபுரி, புவனேஷ்வர் ஆகிய பகுதிகளிலும் சிற்பக்கலை வளர்ந்த நிலையில் இருந்தது. உயரமான மகுடங்கள், மெல்லிய நெடிய உடலமைப்பு போன்றவை சோழர் காலச் சிற்பங்களின் சிறப்பாகும். பிற்காலச் சோழர்களின் சிற்பங்களில் அணிகலன்களும் அலங்காரங்களும் மிகுந்து காணப்பட்டன. மேலும், வட்டமான முக அமைப்பும் சற்று தடித்தும் குட்டையானதுமான உடல் அமைப்புகளுடனும் சிற்பங்கள் காணப்பட்டன.

இராஜராஜ சோழன் எழுப்பிய தஞ்சை பிரகதீசுவரர் கோயிலின் தெற்கு நோக்கிய வாயிலின் கீழ்ப்புறம் புத்தரின் சிற்பமும் இக்கோயிலின் விமானத்தின் வலப்பக்கம் சமணர் உருவங்களும் உள்ளன. இக்கோயிலின் நந்தி சிற்பம் இந்தியாவில் உள்ள நந்திச் சிற்பங்களில் இரண்டாவது பெரிய சிற்பமாகும்.



Unit 4.indd 65 13-02-2020 20:12:55



சண்டேச அனுகிரக மூர்த்தி

இதன் உயரம் 12 அடி, நீளம் 19.5 அடி, அகலம் 8.25 அடியாகும். இரண்டாம் இராஜராஜன் கட்டிய தாராசுரம் கோயிலில் நாயன்மார்களின் வாழ்க்கையைக் குறிக்கும் 90 சிற்பங்கள் உள்ளன.



தஞ்சாவூர் நந்தி

## செப்புத் திருமேனிகள்

தமிழர்கள் உலகத்திற்கு வழங்கிய நன்கொடை, செப்புத்திருமேனிகள். சங்க காலத்திலும் உலோகச் சிற்பங்கள் இருந்திருக்கலாம் என்ற செய்தியை மதுரைக்காஞ்சி, குறுந்தொகை, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்களின் வாயிலாக அறியலாம். இருப்பினும் சோழர் காலமே உலோகச் சிற்பங்கள் அல்லது செப்புத்திருமேனிகளின் பொற்காலம்.

விஜயாலயன், பராந்தகன், செம்பியன் மாதேவி, முதலாம் இராஜராஜன் ஆகியோரது காலத்தில் செப்புத்திருமேனிகளின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சோழர் காலச் செப்புத் திருமேனிகளுள் நடராஜர் சிலை உலகப்புகழ் வாய்ந்தது. சோழ அரசர்களும் அவர்களது குடும்பத்தாரும் கோயில்களுக்குச் செப்புத் திருமேனிகளைக் கொடையாகக் கொடுத்த செய்திகளைக்கல்வெட்டுகளிலும்செப்பேடுகளிலும் காணலாம். பிற்காலப் பாண்டியர்களின் சிற்பக்கலை என்பது, சோழர் காலச் சிற்பக்கலையின் தொடர்ச்சியாகவே இருந்தது. இவர்கள் கோயில்களின் வெளிப்புறச் சுவர்களையும் சிற்பங்களையும் செம்மைப் படுத்துவதிலும் கவனம் செலுத்தினர்.



நடராஜர் உலோகத் திருமேனி

## விஜயநகர மற்றும் நாயக்கர் காலம்

விஜயநகர மன்னர்கள் கட்டடக்கலையில் கொண்டிருந்த ஆர்வம் சிற்பக்கலையிலும் வெளிப்பட்டது. கோபுரங்களிலும், கோயில் விமானங்களிலும் ஏராளமான சிற்பங்களை

அமைத்தனர். உயர்ந்த தூண்களையுடைய மண்டபங்கள் அமைத்தல், மண்டபங்களின் தூண்களில் யாளி, குதிரை, மனித உருவங்கள், புராணத் தொன்மங்களை விளக்கும் சிற்பங்கள் போன்றவை விஜயநகர நாயக்கர் காலச்சிற்பங்களின் தனித்தன்மை. இவர்கள் காலச் சிற்பங்கள் இரும்பில் வார்த்தது போன்ற உறுதி உடையவை. விசயநகரச் சிற்பங்கள் மூக்குக் கூர்மையானதாகவும் வயிறு வட்டமானதாகவும் இருக்கும். மனித உருவச் சிற்பங்களில் அணிகலன்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவர்களின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகே கோயில்களில் சிற்பங்கள் அதிக அளவில் அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது. வேட்டையாடுதல், கோலாட்டம், பாம்பாட்டி நடனம் போன்ற சிற்பங்களைக் கோயில்களில் இடம்பெறச் செய்தல் இவர்கள் கால வழக்கமாக இருந்தது. இத்தகைய சிற்பங்களை மதுரை மீனாட்சியம்மன் கோயில், இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில் போன்ற இடங்களில் காணலாம். தற்காலத்தில் மெழுகு, மணல், கண்ணாடி போன்றவற்றினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.

## ஓவியக்கலை (Painting)

கட்டடக்கலையும் சிற்பக்கலையும் போன்றே ஓவியக்கலையும் கண்ணால் கண்டு மகிழத்தகுந்த கலையாகும். அழகினைப் பாராட்ட, புலவர்கள் ஓவியத்தை உவமையாகக் கூறுவர். ஓவியக்கலை தொன்மையான வரலாற்றினை உடையது. இயற்கையோடு கலந்து வாழ்ந்த மக்கள், தாங்கள் கண்ட காட்சியினையும் வேட்டைக் காட்சிகளையும் வரைந்து மகிழ்ந்தனர். தொல்பொருள் ஆய்வில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களின் மேல், எழுத்துகளும் பல உருவங்களும் காணப்படுகின்றன. தொடக்க காலத்தில் ஓவிய எழுத்துகளே வழக்கில் இருந்தன.

'ஒவ்வு' என்ற வினைச்சொல்லில் இருந்து தோன்றியதே ஓவியம். ஒவ்வு என்பதற்கு ஒன்றைப் பற்று அல்லது ஒன்றைப் போலவே இருத்தல் என்று பொருள். இச்சொல்லிலிருந்து தோன்றிய ஓவு, ஒவ்வு போன்ற சொற்கள் ஓவியத்தைக் குறிக்கின்றன. தான்கண்ட காட்சியை அப்படியே வரைவது காட்சி ஓவியம், மனத்தில் கற்பனை செய்ததை வரைதல் கற்பனை ஓவியம் ஆகும். தொல் பழங்கால மனிதர் சொற்களை அறியும் முன்பே தம் எண்ணங்களைக் காட்சிகளாக உணர்த்தக் கற்றுக்கொண்டனர். தமக்கு மகிழ்வளித்த வேட்டைக் காட்சிகளையும் பிறவற்றையும் ஓவியங்களாகக் குகைகளில் தீட்டியுள்ளனர். பச்சிலைச்சாறு, செம்மண், விலங்குகளின் கொழுப்பு ஆகியனவற்றைக் கொண்டு அவ்வோவியங்களுக்கு வண்ணம் தீட்டினர்.

ஓவியத்தை வட்டிகைச் செய்தி, சித்திரச் செய்தி என்றும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பழங்காலத்தில் சுவர் ஓவியங்களே பெரிதும் காணப்பட்டன. அதனால்தான் "சுவர் இல்லாமல் சித்திரம் இல்லை", சுவரை வைத்தல்லவா சித்திரம் வரைய வேண்டும் என்ற பழமொழிகள் தோன்றின. வளைந்தகோடு, கோணக்கோடு, நேர்க்கோடு ஆகியவற்றைக் கொண்டு ஓவியங்கள் எழுதப்பட்டன. இவ்வாறான கோட்டோவியங்களுக்குப் 'புனையா ஓவியம்' என்று பெயர். இதனை 'வரி வடிவ ஓவியம்' என்றும் அழைப்பர். மடலேறுதலின் பொழுது பனை ஓலையில் வரைந்த கோடுகளால் ஆன ஓவியம் வரிவடிவ ஓவியமாகும். நெடுநல்வாடையில் முதன்முதலாக வரிவடிவ ஓவியம் பற்றிய செய்தி கிடைக்கின்றது. புனையா ஓவியத்தில் பலவித வண்ணங்களைப் புனைந்து அமைக்கும் ஓவியம், 'முழுஓவியம்' எனப்படும். ஓவியம் வரைவோரை ஓவியன், கண்ணுள்வினைஞர், கைவினைஞர், ஓவியவல்லோன், ஓவியப்புலவன் என்றும் அழைப்பர்.

காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு, காஞ்சிபுரம், செங்கம் முதலிய பகுதிகளில் நடந்த அகழாய்வுகளில் கிடைத்த காசுகள், ஓடுகள் முதலியவற்றின் மீது காணப்படும் புடைப்பு ஓவியங்களைக் கொண்டு தொன்மைக்கால மக்களின் ஓவியத் திறனை உணரலாம். கீழடியில்



Unit 4.indd 67 13-02-2020 20:12:56

நடத்தப்பட்ட அகழாய்வில் கருப்பு சிவப்பு வண்ணம் தீட்டப்பட்ட பானைகள் கிடைத்துள்ளன.

மக்கள் கூட்டத்தைக் காட்டும் ஓவியங்கள் பிரதிமை என அழைக்கப்படுகின்றன. தெய்வ வடிவங்களைக் காட்டும் ஓவியங்கள் படிமை எனப்படுகின்றன. அரண்மனைகள், மாளிகைகள், கோயில்கள், பெரிய வீடுகள் போன்றவற்றின் சுவர்களில் சித்திரங்கள் வரையப்பட்டன. மேலும் வெண்மையான சுதை பூசப்பட்ட சுவர்களில் சிவப்பு அல்லது கருப்பு வண்ணத்தால் கோட்டோவியங்கள் வரையப்பட்டன. இவற்றின் மேல் பல வண்ணங்கள் தீட்டும் வழக்கம் இருந்தது. தொல்காப்பியத்தில் ஓவியம் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரனுக்கு நடுகல் வைக்கப்பட்டது. நடுகல்லில் அவ்வீரனின் உருவத்தைச் செதுக்கும் முன்பே ஓவியமாக வரைந்து கொள்வர். அவ்வோவியத்தைப் பார்த்துக் கல்லில் செதுக்குவர். எழுத்து என்ற சொல்லுக்கு 'ஓவியம்' என்றே பொருள் கொள்வர்

பண்டைய தமிழ் மன்னர்கள் ஓவியம் தீட்டுவதற்காகத் தங்கள் அரண்மனைகளிலும் கோயில்களிலும் 'ஓவியமாடம்' என்ற தனிப்பகுதியை அமைத்தனர். இச்செய்தியினை இலக்கியங்கள் மூலம் அறியலாம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் அரண்மனையில் சித்திர மண்டபம் இருந்ததை நெடுநல்வாடையில் நக்கீரர் குறிப்பிடுகின்றார். சங்க காலத்திற்குப் பின் பல்லவர் காலத்தில் கலைகள் தழைத்து ஓங்கின. பனமலை, காஞ்சிபுரம், திருமலைபுரம் ஆகிய இடங்களில் காணப்பட்ட ஓவியங்கள் பல்லவர் காலக் கலைத் திறனைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. தஞ்சையில் வரையப்பட்டுள்ள சிவபெருமான், நாட்டியமாடும் பெண்கள், சேரமான் பெருமாள் நாயனார், இராஜராஜன், கருவூர்த்தேவர் ஓவியங்கள் சோழர் காலத்தவை ஆகும். விஜயநகர நாயக்கர் காலத்து ஓவியங்களைத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் காணமுடிகின்றது.

## பாறை ஓவியங்கள்

தமிழகத்தில் கண்டறியப்பட்ட பாறை ஓவியங்கள், இந்நிலப்பகுதியின் தொன்மையைக் குறிக்கும் சான்றுகளாக அமைகின்றன. இவை மக்களின் கலைஈடுபாடு, சமூக வாழ்க்கை போன்றவற்றை அறிந்துகொள்ள உறுதுணையாக உள்ளன. மலைப்பாறைகளைக் குடைந்து அமைத்த குகைச்சுவர்களின் மேல் ஓவியங்கள் வரையப்பட்டன. இக்குகைகளின் சுவர்கள் கரடு முரடாக இருந்தபடியால் உமி, சாணம், களிமண் முதலான பொருள்களைக் கொண்டு பதப்படுத்திய சுதையைச் சுவர்களின் மேல் பூசினார்கள். பின்னர் அச்சுதைப் பூச்சின் மேல் ஓவியங்கள் வரையப்பட்டன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் பல குகைக் கோயில்களை அமைத்தான். அக்குகைக்கோயில் சுவர்களில் சித்திரங்களை எழுதுவித்தான். அவனே ஓவியக் கலையைப் பயின்றவன் என்பதை "சித்திரக்காரப்புலி" என்ற அவன் பட்டப்பெயரின் மூலம் அறியலாம். தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மல்லபாடியில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட பாறைஓவியம் முக்கியமான ஒரு கண்டுபிடிப்பாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் பல இடங்களில் பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## சித்தன்னவாசல் குகை ஓவியங்கள்



**சித்தன்னவாசல் குகை ஓவியம்**

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசலில் அமைந்துள்ள குகை ஓவியங்கள் புகழ் வாய்ந்தவை. இவை கி.பி.(பொ.ஆ.)



Unit 4.indd 68 13-02-2020 20:12:56

7 மற்றும் 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணர் காலத்து ஓவியங்கள். இவ்வோவியங்கள் மூலிகைகளால் ஆன வண்ணங்களைக் கொண்டவை. சித்தன்னவாசலின் ஏழடிப்பட்டம் பகுதியின் மேல்கூரைப் பகுதியிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன.

## சுவர் ஓவியங்கள்

இலக்கியங்கள், சுவர் ஓவியங்களைப் பற்றிப் பெரிதும் பேசுகின்றன. உதயணனின் பள்ளியறைச் சுவர் ஓவியம் பற்றியும், கோப்பெருந்தேவியின் பள்ளியறைச் சுவர் ஓவியங்கள் பற்றியும் இலக்கியங்களில் காணலாம். பாண்டியன் நன்மாறன், தனது சித்திர மாடத்தில் இருந்த பொழுது உயிர் துறந்தமையால் "பாண்டியன் சித்திர மாடத்துத்துஞ்சிய நன்மாறன்" என அழைக்கப்பட்டதைப் புறநானூற்றில் மாங்குடி மருதனார் குறிப்பிடுகின்றார். நக்கீரரும் தமது நெடுநல்வாடையில் பாண்டியனின் சித்திரமாடத்தைப் பற்றிக் கூறுகிறார். திருப்பரங்குன்ற கோயில் மண்டபத்தில் "எழு தொழில் அம்பலம்" என்ற பெயரில் ஓவியச்சாலை இருந்த செய்தியினைப் பரிபாடலின் மூலம் அறியலாம். இரதி, காமன், பூனை வடிவம் கொண்ட இந்திரன், அகலிகை, கௌதம முனிவர் முதலான ஓவியங்கள் இங்குக் காணப்பட்ட செய்தியினை இலக்கியங்களில் காணலாம். இந்த "எழு தொழில் அம்பலம்" பிற்காலத்தில் அழிந்தது. உதயணனின் பள்ளியறைச் சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்த காட்சியைப் பெருங்கதையில் காணலாம். திருச்சி மாவட்டத்தின் திருவெறும்பூர் கோயிலில் காணப்பட்ட சித்திரக்கூடம் பற்றிச் செப்பேடுகள் கூறுகின்றன.


இவை மட்டுமன்றிச் செல்வந்தர் வீட்டின் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. புத்த தவச்சாலைகள் மற்றும் கோவலனின் தந்தை மாசாத்துவான் தவமியற்றிய சாலைகளிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்த செய்தியினை மணிமேகலை கூறுகின்றது.



**தஞ்சாவூர் சுவர் ஓவியம்**

## துகிலோவியம்

'படம்' என்ற சொல் 'படாம்' என்ற சொல்லில் இருந்து தோன்றியது. படாம் என்பதற்குத் துணி என்று பொருள். பழங்காலத்தில் துணிகளில் ஓவியங்களை வரைந்தார்கள். அவற்றிற்குச் சித்திரப்படாம், சித்திரத்திரை என்று பெயர். சித்திரம் எழுதும் கோலுக்குத் துகிலிகை என்று பெயர். மணிமேகலையில், சீத்தலைச் சாத்தனார் காவிரிப்பூம்பட்டினத்து உவவனம் என்னும் சோலையின் காட்சி சித்திரப்படாம் போன்று அழகுடன் காணப்பட்டது என்கிறார். தக்க நாட்டிலே ஆங்காங்கே தாமரைப் பூக்களும் தாமரை இலைகளும் அடர்ந்த குளங்களும் காணப்படும் காட்சியினைத் திருத்தக்கதேவர் வருணிக்கும் பொழுது, துணியில் எழுதிய தாமரைக்குளத்தின் காட்சியைப் போலக் காணப்படுகிறது என்கிறார். இளங்கோவடிகள் ஓவியம் வரையப்பட்ட துணியை 'ஓவியஎழினி' என்கிறார். பலகைகளிலும் ஓவியங்கள் வரையப்பட்டன. அவ்வாறு ஓவியம் வரையப்பட்ட பலகை 'வட்டிகைப்பலகை' எனப்பட்டது.



துகிலோவியம்

## தஞ்சாவூர் ஓவியங்கள்

சோழர் காலத்தில் தஞ்சாவூர் ஓவியங்கள் தோற்றம் பெற்றன. மராட்டிய மன்னன் சரபோஜியின் காலத்தில் தஞ்சாவூரில் இது வளரச்சி பெற்றது. இவ்வோவியங்கள் தமிழகத்தின் புவிசார் குறியீடுகளில் ஒன்றாகும். இவ்வகை ஓவியங்கள் பெரிய மரச்சட்டத்தின் நடுவே அமைந்திருக்கும். இச்சட்டமும் ஓவியத்தின் ஒரு பகுதியாகவே கருதப்படுகிறது. கடவுளின் உருவங்கள் கித்தானின் பெரும் பகுதியை நிறைத்திருக்கும். மற்ற உருவங்கள் சிறிதாக அதன் கீழ்ப்பகுதியில் அமைந்திருக்கும். இதில் காணப்படும் ஓவியங்களின் உருவங்கள் உருண்டையாகவும் பருமனான அமைப்புடனும் காணப்படுகின்றன. இதன் உருவ அமைப்புகளில் பெண்தன்மை மிகுந்து நளினத்துடன் காணப்படும்.

இவ்வோவியங்கள் நீலம், பச்சை, மஞ்சள், வெள்ளை ஆகிய வண்ணங்களில் மைய ஓவியம் அமைந்திருக்கும். கரும்பச்சை, சிவப்பு, அடர்நீலம் போன்ற வண்ணங்களைப் பின்புலமாகக் கொண்டு காணப்படும். அடர்த்தியான கோடுகள் ஓவியத்தைத் தெளிவாகக் காட்டும் விதமாக அமைந்திருக்கும். இவ்வுருவக்கோடுகள் வண்ணங்களுக்கான எல்லையாகவும் அமையும்.

பழங்கால மக்கள், அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் மீது ஓவியம் வரைந்து மகிழ்ந்திருந்தனர். அன்றாடம் பயன்படுத்தும்



தஞ்சாவூர் ஓவியம்

பாத்திரங்கள், கேடயம், கட்டில், வாள் போன்றவற்றில் ஓவியங்களை வரைந்தனர். தமிழின் நாற்கவிகளில் சித்திரகவியும் ஒன்றாகும். சித்திரகவி போலவே சித்திரநதி, சித்திரசபை, சித்திரதடாகம் எனப் பெயர் சூட்டியதில் இருந்து ஓவியத்திற்குத் தமிழர்கள் அளித்த முக்கியத்துவத்தை அறியலாம். தற்காலத்தில் எண்ணெய் ஓவியம், வண்ணக்கோல் ஓவியம், செயற்கை வண்ணக் கூழ்ம ஓவியம், நீர் வண்ண ஓவியம், மை ஓவியம், பூச்சு ஓவியம், சூடான மெழுகு ஓவியம், நீரில் கரையும் எண்ணெய் ஓவியங்கள் போன்ற ஓவியங்கள் காணப்படுகின்றன.

தமிழர்களின் மிகத் தொன்மைகளுள் ஒன்று ஓவியம். எழுத்தால் உணர்த்தப்பட இயலாத இடைவெளிகளை ஓவியங்கள் நிரப்பின. காலந்தோறும் ஓவியக் கலையிலும் வளர்ச்சிப்படி நிலைகள் உருவாகின. பாறை ஓவியங்களில் தொடங்கி இன்று பல்வேறு நாடுகளின் ஓவிய நுட்பங்களை உள்வாங்கிப் படிநிலை மாற்றம் பெற்று வளர்ந்துள்ளன.

## இசைக் கலை ( Music)

இயற்றப்பட்ட செய்யுளை உரிய ஓசையோடு இசைப்பதால் இதற்கு இசை என்று பெயர். எனவே, இசை என்னும் சொல்

காரணப்பெயர் ஆகும். இவ்விசைக்கு அடிப்படையானவை ஓசை என்று கூறுவர்.

‘ஏழிசையேழ் நரம்பின் ஓசையை’ என்ற திருப்பதிகத்தொடர் மூலம் இசை ஏழு என்பதையும் இவை தனித்தனி நரம்புகளில் இசைக்கப்பட்டன என்பதையும் அறியலாம். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன ஏழு இசைகள் ஆகும். ஏழிசைகளுள் தாரம் என்னும் இசையே, இசை வளர்ச்சிக்கு ஆதாரமானது என்பர்.

மிடற்றினால் குரலும் நாவினால் துத்தமும் அண்ணத்தால் கைக்கிளையும் சிரத்தால் உழையும் நெற்றியால் இளியும் நெஞ்சால் விளரியும் மூக்கால் தாரமும் தோன்றுவதாக இசை இலக்கண நூல்கள் கூறுகின்றன. இவ்விசைகள் படிப்படியாக மேல் உயர்ந்து செல்லும் இசைநிரலை ‘ஆரோசை’ எனவும் தாழ்ந்து செல்லும் இசைநிரலை ‘அமரோசை’ எனவும் சேக்கிழார் கூறுகிறார். ஆரோசை, அமரோசை ஆகியவற்றை இக்காலத்தில் ஆரோகணம், அவரோகணம் என்பர்.

## இசைக்கருவிகள்

இசைக்கு உரிய கருவிகளைத் தோல்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள் என வகைப்படுத்துவர்.



**தோல்கருவிகள்**

பண்டைய நாளில் வாழ்ந்த இசைக் கலைஞர்கள் குழலையும் யாழையும் கொண்டே ஏழிசைத் திறங்களை இசைத்துள்ளனர். இவை தனிச் சிறப்புடையனவாகக் கருதப்பட்டதைக் ‘குழலினிது யாழினிது என்ப’ என்ற வள்ளுவரின் தொடர் மூலம் அறியலாம்.

இசைக் கலைஞர்கள் துளைக்கருவிகளில் தொன்மையானது குழலே ஆகும். இது புல் வகையாகிய மூங்கிலில் செய்யப்பட்டதால் வேய்ங்குழல் என்றும் புல்லாங்குழல் என்றும் அழைக்கப்பட்டது.



**துளைக்கருவிகள்**

முற்காலத்தில் மூங்கிலிலும் சந்தனம், கருங்காலி, செங்காலி ஆகிய மரங்களிலும் வெண்கலத்திலும் செய்யப்பட்டது. ‘வேய்ங்குழல்’ முல்லை நிலத்தவரின் முதன்மை இசைக் கருவியாக விளங்கியது.



**நரம்புக்கருவி**

வில் நாணின் ஓசையைக் கேட்டு, அதன் இசை நுட்பத்தை உணர்ந்து, நாணின் நீளத்தைக் கூட்டியும் குறைத்தும் பல்வேறு இசை ஒலிகளை உருவாக்கினர். இவ்வாறு இசைகளைத் தரும் வில் பலவற்றை ஒன்றாக இணைத்து அமைக்கப்பட்ட நரம்புக்கருவியே, ‘வில்யாழ்’ ஆகும்.



நரம்புக்கருவி

ஆநிரைகளை மேய்க்கும் ஒருவன் குமிழமரக் கொம்புகளை வில்லாக வளைத்து அதில் மரல்நாரினை நரம்பாகக் கட்டி வில்யாழ் அமைத்துக் குறிஞ்சிப் பண்ணை வாசித்தான் என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. இந்த வில்யாழை அடிப்படையாகக் கொண்டு பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் ஆகியவையும் பெருங்கலம் என்னும் ஆதியாழும் அமைக்கப்பெற்றன.

தொல்காப்பியர் கூறும் தோல் இசைக் கருவிகளில் ஒன்று பறை. இது தோல் இசைக் கருவிகளின் தாயாகவும் கருதப்படுகிறது.

பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சிறுபறை, பெரும்பறை, நாழிகைப்பறை எனத்தோல் கருவிகள் முப்பது உள்ளதாக அடியார்க்கு நல்லார் உரை கூறுகிறது. இவற்றில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட தோல் கருவி மத்தளம் ஆகும்.

இசைக்கும்போது மத்தளத்தை முதற்கருவியாகக் கொள்வர். இடையிடையே வாசிக்கச் சலிகை என்னும் கருவியைப் பயன்படுத்துவர். அதனால், இக்கருவியை இடைக்கருவி என்றும் சொல்வர்.

முதலாம் இராஜராஜசோழன் கட்டிய இராசராசேச்சுரக் கோயிலில் உடுக்கை வாசிப்பவரும், கொட்டிமேளம் வாசிப்பவரும் இருந்தனர் எனத் தென்னிந்தியக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

## இசை நூல்கள்

இறையனார் களவியல் உரை மூலம் முதுநாரை, முதுகுருகு ஆகிய நூல்கள் இருந்தன என்பதை அறியமுடிகிறது. இந்நூலின் உரைப்பாயிரம் சிற்றிசை, பேரிசை ஆகிய நூல்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இந்திரகாளியம் முதலான நூல்களைப் பற்றி அடியார்க்கு நல்லார் கூறுகிறார். இசை நுணுக்கம் என்னும் நூல் சயந்தன் என்னும் பாண்டிய இளவரசனால் இயற்றப்பட்டது என்று கூறியுள்ளார்.

யாப்பருங்கலக்காரிகை உரைப்பாயிரத்தில், குலோத்துங்கன் இசைநூல் என்ற நூலைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இசை தொடர்பான பல நூல்களின் பெயர் கிடைத்த போதும் அறிவனார் இயற்றிய 'பஞ்சமரபு' என்னும் நூல் தற்போது நமக்குக் கிடைத்துள்ளது. ப. சுந்தரேசனார் என்பவர் இந்நூலை உரையோடு வெளியிட்டுள்ளார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

### இசைத்தூண்கள்

தமிழகத்தில் திருநெல்வேலி, ஆழ்வார் திருநகரி, செண்பகநல்லூர், மதுரை, தாடிக்கொம்பு, அழகர் கோயில், கிருஷ்ணாபுரம், தென்காசி, குற்றாலம், சுசீந்திரம், களக்காடு போன்ற இடங்களில் இசைத்தூண்கள் காணப்படுகின்றன.

## இசைக் கலைஞர்கள்

பாணர், பாடினி ஆகியோர் வாய்ப்பாட்டிலும் இசைக்கருவிகளை இசைப்பதிலும் வல்லவர்களாக

விளங்கினர். பாணர் என்பவர், ஆண் இசைக்கலைஞர்; பாடினி என்பவள், பெண் இசைக்கலைஞர் ஆவர்; இவ்விசைக் கலைஞர்கள் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என வகைப்படுத்தப்பட்டனர்.

துளைக்கருவி வாசிப்போர், தோல்கருவி வாசிப்போர், நரம்புக்கருவி இசைப்போர், கண்டத்தால் பாடுவோர் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளதைச் சிலப்பதிகார இந்திரவிழவூரெடுத்த காதை கூறுகிறது.

இசைப்பாணர்கள் வாய்ப்பாட்டுப் பாடுவதில் வல்லவர்களாக இருந்தனர். யாழ் என்னும் இசைக் கருவிகளை மீட்டுவதில் வல்லவர்களை 'யாழ்ப்பாணர்' என அழைத்தனர். சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய இலக்கியங்களில் யாழ்ப்பாணர் பற்றிய செய்திகள் மிகுதியாக உள்ளன. மண்டை எனப்படும் ஓட்டினைக் கையில் ஏந்திப் பாடியவர்கள், மண்டைப்பாணர் என அழைக்கப்பட்டனர்.

இக்கலைஞர்கள் திருவிழாக்களிலும் அவைக்களத்திலும் பாடிப் பிறரை மகிழ்வித்தனர். தலைமக்களுக்கு இடையே தூதுவர்களாகவும் இருந்துள்ளனர்.

## சங்க இலக்கியமும் இசையும்

சங்ககாலத்தில் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு இசைக்குப் பெயர்கள் சொல்லப்பட்டன. குறிஞ்சி நிலத்திற்குக் குறிஞ்சிப்பண், முல்லை நிலத்திற்குச் சாதாரி, பாலைக்குப் பஞ்சுரப்பண், நெய்தலுக்குச் செவ்வழிப்பண், மருதத்திற்கு மருதப்பண் என ஐவகைப் பண்கள் இசைக்கப்பட்டன.

மலைச்சாரல் பகுதியில் விளைந்திருந்த தினைப்பயிரை உண்ணவந்த காட்டுயானை, அப்பயிரைக் காவல் காத்த பெண் இசைத்த குறிஞ்சிப்பண்ணைக் கேட்டுப் பயிரை உண்ணாமல் இசையில் மெய் மறந்து நின்றதை அகநானூறு கூறுகின்றது.

போரில் புண்பட்ட வீரரைப் பேய்களிடமிருந்து காப்பாற்ற காஞ்சிப்பண் பாடப்பட்டதாகப் புறநானூறு கூறுகிறது. யாழ் என்னும் இசைக் கருவிகளால் கலைஞர்கள் மருதப்பண்ணைப் பாடிப் பொழுது விடிந்ததாக மதுரைக்காஞ்சி கூறுகிறது. மேலும் அது ஆகுளி, முழவு என்னும் கருவிகளைக் கொண்டு செவ்வழிப்பண்ணை மாலைநேரத்தில் இசைத்தனர் என்பதையும் சுட்டுகிறது. இச்செவ்வழிப் பண்ணைக் கேட்டுத் தலைவனைப் பிரிந்த தலைவி மிகவும் வருத்தம் கொண்டாள் என்ற செய்தியும் உண்டு.

நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பண்களைத் தவிர காமரம், நைவளம் போன்ற பண்களும் சங்க காலத்தில் இருந்துள்ளன. வண்டின் ஓசைபோல் இருப்பது காமரம் என்று அழைக்கப்பட்டமைக்கான குறிப்புகளும் கிடைக்கின்றன.

பரிபாடலில் வெறியாட்டப்பாடல், வள்ளைப்பாடல் முதலிய இசைப்பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பாடலை இசைப்பதற்குரிய பண்ணும் இசை வகுத்த இசைக் கருவிகள் போன்ற தகவல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

## சிலம்பும் இசையும்

இசை ஆசிரியன், மத்தளம் இசைக்கும் தண்ணுமை ஆசிரியன், வேய்ங்குழல் ஊதுவோன், யாழ் ஆசிரியன் எனப் பலரும் மாதவி நாடக அரங்கில் ஆடும் ஆடலுக்குத் துணை நின்றார்கள் எனச் சிலம்பு கூறுகிறது.

இசையின் இயக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முதல்நடை, வாரம், கூடை, திரள் என இசை வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை, மந்த நடையாகத் தாழ்ந்து செல்லும் முறையில் இசைக்கப்படுவது முதல்நடை. முடுகிச் செல்லும் விரைந்த நடை உடையது திரள். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட இசை நடையை உடையது வாரம். சொற் செறிவும் இசைச் செறிவும் உடையது கூடை ஆகும்.

அரங்கேற்றுக்காதை, ஆய்ச்சியர்குரவை, கானல்வரி, வேனிற்காதை, கடலாடுகாதை, புறஞ்சேரியிறுத்தகாதை முதலிய பகுதிகள் இசைக்குறிப்புகள் நிரம்பியவை. மேலும் யாழ் அமைப்பு, யாழ் இசையின் அமைப்பு முதலியனவும் கூறப்பட்டுள்ளன. மேலும், பெருங்கதை போன்ற காப்பியங்களிலும் இசை பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.

## பக்தி இயக்கமும் இசையும்

செய்யுளைப் பண் அமைப்போடு, படைப்பாளனே படைப்பது ஒருவகை. செய்யுளை எழுதிப் பின் வேறொருவர் பண்ணிசைப்பது மற்றொரு வகை. தேவாரம் முதல்வகையைச் சேர்ந்தது என்பர். மாணிக்கவாசகர் தேவாரங்களைப் 'பண் சுமந்த பாடல்' என்று கூறுகிறார். எனவே, இறைவனின் அருளைச் சொற்களாக்கி இசைப்படுத்தியவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் எனலாம்.

ஆநிரைகளை மேய்க்கும் பணியை மேற்கொண்ட பொழுது காலையில் மேய்ச்சலுக்குப் போவதும் மாலையில் வீடு திரும்புவதும் வழக்கம். ஒருநாள் மாலைநேரம் வந்தவுடன் ஆநிரைகளும் எருமைகளும் வந்துவிட்டன. ஓர் எருமை மட்டும் காணவில்லை. தேடிப் பார்க்கிறார். கண்ணுக்குப் புலப்படவில்லை. எனினும், அவ்வெருமையின் கனைப்பொலி மட்டும் கேட்கிறது. கனைப்பொலியைக் கேட்ட அவர், தன்கையில் இருந்த வேய்ங்குழலை எடுத்து ஊதி இசையை எழுப்பினார். அவ்விசையைக் கேட்ட அந்த எருமை இசை எழுப்பப்பட்ட இடத்திற்கு வந்து, மற்ற மாடுகளோடு சேர்ந்து வீடு அடைந்ததாகத் திருஞானசம்பந்தர் பாடுகிறார்.

திருநாவுக்கரசர் திருவதிகை என்னும் ஊருக்குச் சென்று இறைத்தொண்டு புரிந்து வந்தார். அவ்வூரில் உள்ள சிவபெருமானை வணங்கச் சுந்தரர் ஒருமுறை செல்கிறார். திருநாவுக்கரசர் வந்துசென்ற அவ்வூரைத் தாம் காலால் மிதிக்கக்கூடாது என எண்ணிய சுந்தரர் ஊருக்குள் போகாமல் ஊருக்கு வெளியே உள்ள 'சித்தவடமடத்தில்' தங்கி உறங்குகிறார். அப்போது சுந்தரர் தலைமீது சிவபெருமான் தன் பாதங்களை வைத்து அருள்புரிந்தார். சிவனின் இந்த அருளை எண்ணித் 'தம்மானையறியாத' என்னும் பதிகத்தைப் பாடினார் என்பது வரலாறு. இப்பதிகம் கொல்லிக் கௌவாணம் என்னும் பண்ணில் அமைந்ததாகும்.

பின்னொரு தருணத்தில் திருவாரூரில் உள்ள சிவபெருமானைப் பற்றிப் பாடிய பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்ததாகும். கொல்லிக் கௌவாணம், கொல்லிப்பண் ஆகிய இவ்விரு பண்களும் நள்ளிரவில் பாடப்பட்டதாகச் சேக்கிழார் கூறுகிறார். இவை பழங்காலத்தில் வழங்கப்பட்டிருந்த பண்களோடு தொடர்புடையன.

இப்பாடல்களும் இவற்றின் பண் அமைப்புகளும் மறையும் நிலையில் இருந்தன. அப்போது திருமுறைகண்டசோழன் யாழ்ப்பாணர் மரபில் வந்த பாடினியைக் கொண்டு அப்பாடல்களின் பழைய பண் அமைப்புகளுக்குப் புத்துயிர் அளித்தான். சில புதிய பண்களும் தோற்றுவிக்கப்பட்டன. இச்செய்தியைத் திருமுறைகண்ட புராணம் கூறுகிறது. இப்பண்களைக் கோவிலில் பாட ஓதுவார் என்னும் இசைக் கலைஞர்களையும் நியமித்தவனும் இம்மன்னனே. இவ்வோதுவார்களின் பணி இன்றும் தொடர்கிறது.

முதலாம் மகேந்திரவர்மன் இசை, நாடகம், ஓவியம் முதலிய கலைகளில் வல்லவனாக இருந்துள்ளான். இம்மன்னனால் பொறிக்கப்பட்ட குடுமியான்மலைக் கல்வெட்டின் முடிவில் 'எட்டிற்கும் ஏழிற்கும் இவையுரிய' என்ற தொடர் உள்ளது. இத்தொடர் 'சங்கீரணம்' என்னும் இசையைப் பற்றிக் குறிப்பதாகும். தேவாரங்களில் காணப்படாத 'சாளரபாணி' என்ற பண் திருவிசைப்பாவில் உள்ளது.

ஆனால், தேவாரங்களுக்குப் பண் வகுக்கப்பட்ட காலத்தில் நிலவிய இசையும் சேக்கிழார் காலத்தில் நிலவிய இசையும் 'சாரங்கதேவர்' குறிக்கும் தேவாரப் பண்களின் இசையும் இடைக்காலத்தில் தோன்றிய 'இசைமரபு' என்கிறார் வெள்ளைவாரணர்.

கீர்த்தனைகள் என்ற இசைப்பாடல் வடிவம் பிற்காலத்தில் தோன்றின. கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர் முதலியோரால் எழுதப்பட்ட கீர்த்தனைகள் குறிப்பிடத்தகுந்தவையாகும்.

பண்டைய காலந்தொட்டே தமிழர்களின் வாழ்வியலோடு கலந்து இசைக்கலை வளர்ந்து வந்துள்ளது. சங்க காலத்துப் பாணர்களும், பாடினிகளும், விறலியரும் இசையை வளர்த்து வந்துள்ளனர். ஐவகை நிலப்பிரிவிற்கு யாழ், பண், பறை முதலியன அமைந்திருந்தன. சங்கம் மருவிய காலத்துத் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் களப்பிரர்கள். களப்பிரர்கள் சமண சமயத்தைத் தழுவினர். அற இலக்கியங்கள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றின. இவை பெரும்பான்மையும் வெண்பா யாப்பிலேயே அமைந்தன. ஆனால் சங்க காலத்தில் வெண்பா யாப்பு வழக்கில் இல்லை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை முதலியவற்றில் இசைக்கருவிகள் பற்றிச் செய்திகள் காணக்கிடைக்கின்றன. சோழர்காலக் காப்பியங்களும் நாயக்கர் காலச் சிற்றிலக்கியங்களும் தமிழோடு இசையையும் சுமந்து வந்து நால்வர் இசை மரபை உருவாக்கியது. இன்று பண்னோடு இசைக்கூறுகளையும் உள்ளடக்கியதாக வளர்ச்சி பெற்றுள்ளது.

## நடனக்கலை (Dance)

நடனக்கலை, ஆடல்கலை, கூத்துக்கலை என்றும் அழைக்கப்படுகிறது. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சில கூத்து வகைகள் கூறப்பட்டுள்ளன. அவை, வேலன் ஆடும் வெறிக்கூத்து, வீரர்கள் ஆடும் கருங்கூத்து, பெண்கள் ஆடும் வள்ளிக் கூத்து, இளையவீரனின் வெற்றியைப்பாராட்டி இருபாலரும் ஆடும் கழனிலைக் கூத்து போன்றவையாகும்.



**நடன மரச்சிற்பம்**

சங்க காலத்தில் கூத்துக்கலையை வளர்த்தவர்கள் கூத்தர்கள் எனப்பட்டனர். கூத்தர் இனப் பெண்கள் விறலி, ஆடுமகள், ஆடுகளமகள் என்றும் கூத்தர் இன ஆண்கள் கூத்தன், ஆடுமகன், ஆடுகளமகன் என்றும் அழைக்கப்பட்டனர். பண்டைய அரசர்கள் கூத்தர்களைப் பாராட்டிப் பரிசளித்தனர். அரசர்கள் விறலியர்க்குப் பரிசளித்த செய்தியினைச் கோவூர்க்கிழார், மாங்குடி மருதனார் போன்ற புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறும் நாடக மகளிர் என்னும் தொடர் நடன மகளிர், கூத்த மகளிர், விறலியர் என்னும் பொருளையே அளிப்பதாக மா. இராசமாணிக்கனார் கூறுகின்றார்.

நடனம் கற்கும் பெண் தனது 7 ஆம் வயது முதல் 12 ஆம் வயது வரை ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் நடனக்கலைப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். நடனக்கலையைக் கற்பிக்கும் ஆசிரியர் தலைக்கோல் ஆசான் என்று அழைக்கப்பட்டார். இவர், வேத்தியல், பொதுவியல் என இருவகைக் கூத்துகளிலும் சிறந்தவராக இருத்தல் வேண்டும்.


அடியார்க்குநல்லார் கருத்துப்படி கூத்து நான்கு வகைப்படும். அவை, சொக்கம், மெய்க்கூத்து, அபிநயம், நாடகம் என்பன. இதில் சொக்கம் என்பது இசையுடன் கூடிய தூய நடனம்.



Unit 4.indd 75 13-02-2020 20:12:58

மெய்க்கூத்து என்பது இசையுடன் கூடிய அகம் சார்ந்த நடனம். அபிநயம் என்பது இசையுடன் கலந்த பாடலுக்கு ஏற்ற நடனம். நாடகம் என்பது இசையுடன் கதை தழுவி வரும் பாட்டிற்கான நடனம். ஆடல் என்பது எல்லா வகைக் கூத்துகளையும் குறிக்கும் என்கிறார் அடியார்க்குநல்லார்.

## ஆடல் வகைகள்




சிலப்பதிகாரத்தில் மாதவி பதினோரு வகை ஆடல்களை ஆடினாள். அவையாவன; 1. அல்லியம் 2. கொடுகொட்டி 3. குடைக்கூத்து 4. குடக்கூத்து 5. பாண்டரங்கம் 6. மல்லியம் 7. துடி 8. கடையம் 9. பேடு 10. மரக்கால் 11. பாவை என இவை தெய்வங்களால் ஆடப்பெறுவதால் 'தெய்வவிருத்தி' என்றும் அழைக்கப்படுகின்றன.

## முத்திரைகள்

அகக்கூத்து, புறக்கூத்து எனக் கூத்து இரண்டு வகைப்படும். இருவகைக் கூத்துகளுமே ஆடல் என அடியார்க்கு நல்லார் கூறுகின்றார். நடனத்தின் பொழுது ஒரு கையினால் காட்டப்படும் முத்திரைகளும், இரு கைகளினால் காட்டப்படும் முத்திரைகளும் கூறப்பட்டுள்ளன. பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை எனப் பகுக்கப்பட்டுள்ளன. பிண்டி, பிணையல் இரண்டும் புறக்கூத்தில் காட்டப்படுவன. எழிற்கை, தொழிற்கை இரண்டும் அகக்கூத்தில் காட்டப்படுவன. இவற்றில் பிண்டி ஒரு கையால் காட்டப்படும் முத்திரை. இது 24 வகையாக அமையும். பிணையல் இரண்டு கைகளாலும் காட்டப்படுவது. இது 13 வகையாக உள்ளது.

## நடன நூல்கள்

நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து', 'வந்த முறையின் வழிமுறை வழாமல்' என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து சிலப்பதிகாரக் காலத்திற்கு முன் நாட்டிய நூல்கள் இருந்தமை

| | | |
|---|---|---|
| அல்லியம் | : | கண்ணன் யானையின் தந்தத்தை ஒடித்ததைக் காட்டும் ஆடல் |
| கொடுகொட்டி | : | சிவபெருமான் முப்புரத்தை எரித்த பொழுது வெற்றியில் கைகொட்டி ஆடிய ஆடல் |
| குடைக்கூத்து | : | முருகன் அவுணரை வென்ற போதுஆடிய ஆடல் |
| குடக்கூத்து | : | கண்ணன் தன் பேரனான அநிருத்தனை அசுரரிடமிருந்து மீட்பதற்காகக் குடத்தை வைத்துக் கொண்டு ஆடிய ஆடல். |
| பாண்டரங்கம் | : | சிவபெருமான் முப்புரத்தை எரித்த பின்னர் நான்முகன் காணும்படி ஆடிய ஆடல் |
| மல்லியம் | : | கண்ணன் வாணன் என்னும் அசுரருடன் போர் செய்ததைக் காட்டும் கூத்து. |
| துடி | : | சூரபதுமனை வென்ற பிறகு கடலினை மேடையாகக் கொண்டு முருகன் ஆடியதைக் கூறும் கூத்து. |
| கடையம் | : | இந்திரன் மனைவி அயிராணி உழத்தி உருவத்தோடு ஆடியது. இது உழத்திக்கூத்து என்றும் அழைக்கப்படுகிறது. |
| பேடு | : | காமன் தன்மகனான அநிருத்தனை சிறை மீட்பதற்காக வாணனுடைய சோ என்னும் நகரத்தில் பேடியுருவம் கொண்டு ஆடியது. |
| மரக்கால் | : | கொற்றவை தன்னை எதிர்த்து பாம்பு, தேளாக வந்த அசுரரைக் கொல்வதற்காக ஆடிய ஆடல். |
| பாவை | : | அசுரரை வெல்ல திருமகள் ஆடிய ஆடல். |



Unit 4.indd 76 13-02-2020 20:12:58

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> வேத்தியல், பொதுவியல் எனக் கூத்து இரு வகைப்படும். வேத்தியல் கூத்து வசைக்கூத்து, வரிக்கூத்து, சாந்திக்கூத்து, இயல்புக்கூத்து, ஆரியம் என்று பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.
>
> பொதுவியல் கூத்து புகழ்க்கூத்து, வரிச்சாந்திக் கூத்து, வினோதக்கூத்து, தேசியக்கூத்து, தமிழ்க்கூத்து என்று பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

தெளிவாகின்றது. பதினோரு வகையான ஆடல்களும் அவற்றின் உறுப்புகளும் பாடல்களும் யாப்பருங்கலம் நூலின் உரையில் கூறப்பட்டுள்ளன. பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், கூத்தநூல் ஆகியன கூத்து பற்றிய நூல்கள் ஆகும். இவற்றில் பரதமும் அகத்தியமும் அடியார்க்கு நல்லார் காலத்திலேயே மறைந்தன. இந்நூல்கள் இன்று கிடைக்கவில்லை.

## குரவைக்கூத்து

மகளிரால் ஆடப்படுவது குரவைக்கூத்து. ஏழு முதல் ஒன்பது பேர் வட்டமாக நின்று கைகோத்து ஆடுவது. இது குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை என இரு வகைப்படும். குன்றக்குரவை என்பது குறிஞ்சி நிலத்தில் வாழும் மகளிர் முருகனுக்காக ஆடும் ஆடல். ஆய்ச்சியர் குரவை முல்லை நிலத்தில் வாழும் மகளிர் திருமாலுக்காக ஆடும் ஆடல்.

## பல்லவர் காலம்

பல்லவர் காலத்தில் நடனக்கலை சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. முதலாம் மகேந்திரவர்மன் 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற தனது நூலில் சிவபெருமானின் தாண்டவங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ராஜசிம்மன் கட்டிய காஞ்சி கைலாசநாதர் கோயிலில் சிவபெருமான் ஆடியதாகக் கூறப்படும் பதாகை நடனம், லதாவிருச்சிக நடனம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்த தாண்டவம் ஆகியன சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலில் கூத்தன் கூத்தியர் உருவங்கள் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலத்தவரான சுந்தரர், நடன மாதரான பரவை நாச்சியாரை மணந்துகொண்ட செய்தியை இலக்கியங்களில் காணலாம். தில்லையில் உள்ள சிவபெருமான், 'கூத்தப்பெருமான்' என நாயன்மார்களால் பாடப்பட்டார். பல்லவர் காலத்தில் நடனமாதர் மாணிக்கத்தார், கணிகையர் எனப்பட்டனர். அக்காலத்தில் காஞ்சிபுரம் முக்தீச்சுரர் கோயிலில் மட்டும் 42 நடன மாதர் இருந்தனர் என்ற செய்தியினை ஆவணங்கள் தெரிவிக்கின்றன. பல்லவர் காலத்தில் நடனம் வகித்த இடத்தை இவற்றின் மூலம் அறியமுடிகின்றது.

## சோழர் காலம்

சோழர் காலம் கலைகளின் வளர்ச்சியால் பொற்காலமாகத் திகழ்ந்தது. சைவ வைணவ சமயங்கள் இக்காலத்தில் வளர்ச்சி பெற்றன. கோயில்கள் பெரும்பான்மை கற்கோயில்களாக



நடனம்

மாற்றப்பட்டன. கோயில்களில் நடனம் உட்பட அனைத்துக் கலைகளும் வளர்க்கப்பட்டன. கோயில் கருவறைகளின் அடிப்பகுதியில்கூட, நடன வகைகள் செதுக்கப்பட்டிருந்தன. இதற்கு சிதம்பரம், தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், திருவண்ணாமலை ஆகிய கோயில்கள் சான்று. இவர்கள் காலச் சிற்பங்களில் கூத்தியர் மட்டும் தனித்து நடனம் ஆடும்படியான சிற்பங்களைப் பெரிதும் காணலாம்.

தஞ்சாவூர்ப் பெரிய கோயில் கருவறையின் புறச்சுவரில் நடன மாதர்களின் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வோவியத்தில் நடனப் பெண்களின் கூந்தல் ஒப்பனை, உடை, இசைக்கருவிகள், முகப்பொலிவு, உருவ அமைப்பு ஆகியன நடனப் பெண்கள் பெற்றிருந்த சிறப்பைக் காட்டுகின்றன. இராஜராஜ சோழன், தஞ்சைப் பெரிய கோயிலில் ஆடல் நிகழ்த்துவதற்காகப் பதியிலார் எனப்படும் நடனத்தில் சிறந்த பெண்களை நாடெங்கிலும் இருந்து தேர்ந்தெடுத்து வரச் செய்தான். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும் ஒரு வேலி நிலமும் அளித்தான். இச்செய்தியினைத் தஞ்சைக் கல்வெட்டில் காணலாம். திருவிடை மருதூருக்கு அருகில் உள்ள காமரசவள்ளி என்னும் ஊரில், சிறப்பாகச் சாக்கைக் கூத்தாடும் ஒருவருக்கு 'சாக்கை மாராயன்' என இராசேந்திரன் பட்டம் வழங்கிய செய்தியினைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

## பிற்காலம்

நாயக்கர் காலத்தில் கர்நாடக இசைவடிவம் தமிழகத்தில் வளரத் தொடங்கியது. இக்காலத்தில் வடமொழி நடன நூல்கள் தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்டன.

மகாபாரத சூடாமணி, அபிநயதர்ப்பணம், அபிநயதர்ப்பண விலாசம், பரவராக தாளம், சுத்தானந்தப் பிரகாசம், ஆதிமூல பாரதம், பரத சாத்திரம், பரத சேனாபதியம் முதலிய மொழிபெயர்க்கப்பட்ட நடன நூல்களை மா. இராசாணிக்கனார் பட்டியலிடுகின்றார்.



பரத நாட்டியம்

தமிழர்களால் தொன்றுதொட்டு வளர்க்கப்பட்டு வரும் கலை பரதநாட்டியம். இசைப்பாட்டிற்கேற்ப அபிநயம் காட்டிப் பாவகம் தோன்ற ஆடப்படுவது. இதற்குக் கைக்குறியீடுகள் இன்றியமையாதன. இவை, இளங்கோவடிகள் கூறுவதைப் போன்றே ஒரு கை முத்திரை, இருகை முத்திரை என இரண்டு வகைப்படுகின்றது. ஒருகை முத்திரை இணையா வினைக்கை என்றும், பிண்டிக்கை என்றும் அழைக்கப்படுகின்றது. இருகை முத்திரை இணைக்கை, இரட்டைக்கை, பிணைக்கை என்றும் அழைக்கப்படுகின்றது. இம்முத்திரைகள் பரதத்திற்கு உயிர் போன்றவை. இம்முத்திரைகளைப் புரிந்துகொள்ளாமல் பரதத்தைச் சுவைத்து இன்புறுவது கடினமாகும். இவ்வாறு காலந்தோறும் தமிழகத்தில் நடனக்கலை தழைத்து வந்துள்ளது.

மனித இனம் நாடோடியாக வாழ்ந்த காலத்திலிருந்தே தங்களின் உணர்வுகளை நடனத்துடன் வெளிப்படுத்தி உள்ளனர். முற்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த நடனக்கலை பற்றிய செய்திகளை இலக்கியம், சிற்பம், ஓவியங்கள் மூலம் அறியலாம். தமிழர்களின் தொன்மைக் கலையான பரதம் பல வகையான முத்திரைகளையும் பாவங்களையும் உள்ளடக்கியது. இஃது உலகின் அதிக

மக்களால் விரும்பிப் போற்றப்படும் கலையாகவும் உள்ளது.

## நாட்டுப்புறக் கலைகள் (Folk Arts)

நாட்டுப்புற விளையாட்டுகள் என்பது, நாட்டுப்புறக் கலைகளில் ஒன்று. இவை நாட்டுப்புற மரபில் சிறப்பிடம் பெறுபவை. போலச் செய்தல், உடல்திறம் காணல், அறிவு வெளிப்பாடு, சமூக உறவு, வாழ்க்கைப் பயிற்சி, சிந்தனை ஆற்றல் முதலியவற்றை உள்ளடக்கிய இவ்விளையாட்டுகள் பண்பாட்டை வெளிப்படுத்துவன ஆகும். உடல்வலிமை, மனவலிமை ஆகியவற்றை நிலைநாட்டுவதே இவற்றின் முதன்மை நோக்கம். மரபு அடிப்படையிலும் இவ்விளையாட்டுகள் விளையாடப்பட்டுள்ளன. ஏறுதழுவுதல், ஓட்டப்போட்டிகள் முதலியன மரபு சார்ந்தவை. மரபு சார்ந்து ஆடப்படும் இவ்விளையாட்டுகள் வீரத்தை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## தமிழக விளையாட்டுகள்

விளையாட்டு என்பது விரும்பியாடும் ஆட்டு. விளை - விருப்பம், ஆட்டு - ஆட்டம். தமிழர் மரபில் சிறப்பிடம் பெறுபவை விளையாட்டுகள். கெடவரல், பண்ணை ஆகிய இரண்டு வகையான விளையாட்டுகள் பற்றி கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு (தொல். உரி 21)

எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. சிறுமிகளை விலங்குகளிடம் இருந்து காப்பது போல நடித்து விளையாடுவது கெடவரல் என்றும் உழவர்கள் பயிர் செய்வது போல நடித்து விளையாடுவது பண்ணை விளையாட்டு என்றும் தேவநேயப்பாவாணர் கூறுகின்றார். மகிழ்தலை நோக்கமாகக் கொண்டது விளையாட்டு. எண்வகை மெய்ப்பாட்டில் ஒன்றான உவகை, நான்கு வழிகளில் தோன்றும் எனத் தொல்காப்பியர் கூறுகின்றார்.

செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே
(தொல். மெய்ப்பாட்டியல் – 255)

தமிழக விளையாட்டுகள் அனைத்துமே இரண்டு குழுவாகப் பிரிந்து விளையாடும் பொதுத் தன்மையைப் பெற்று இருக்கும். விளையாட்டின் வெற்றி தோல்வியின் காரணமாக யாரும் பிறருக்குத் துன்பம் விளைவிக்கக் கூடாது. விளையாட்டில் பிறருக்கு ஏற்படும் துன்பத்தையும், எதிர் அணியாக இருப்பினும் தம் துன்பம் போல் கருதுதல் வேண்டும். இது தமிழக விளையாட்டுகளுக்கான பொது விதியாகும்.

பிள்ளைத்தமிழ், குழந்தைகளுக்கான பத்துப் பருவங்களைக் கூறுகின்றது. பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரண்டு வகைப்படுகிறது. முதல் ஏழு பருவங்கள், ஆண்பால் பிள்ளைத் தமிழுக்கும் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவானவை. இறுதி மூன்று பருவங்கள் விளையாட்டுகள் பற்றிக் கூறுகின்றது. சிற்றில், ஊசல் என்பன பெண்கள் விளையாடும் விளையாட்டுகள் ஆகும். சிறார்கள் சிறு வீடு கட்டி விளையாடுவது சிற்றில்; தெருவில் பறையடித்து விளையாடுவது சிறுபறை; சிறு தேர் செய்து விளையாடுவது சிறுதேர் ஆகும். பெண்கள் இல்லத்தில் அமர்ந்து விளையாடும் விளையாட்டுகள் மட்டுமே பெண்பாற் பிள்ளைத் தமிழில் கூறப்பட்டுள்ளன. அம்மானை என்பது, சிறுமிகள் வட்டமாக அமர்ந்து பாடல் பாடி விளையாடுவது. கழங்கு என்பது, சிறுமிகள் கல் வைத்து விளையாடும் விளையாட்டாகும். ஊசல் என்பது, சிறுமிகள் பாடல் பாடிக் கொண்டு ஊஞ்சல் ஆடுவதாகும்.

பிள்ளைத் தமிழ் கூறுவதைப் போலவே தமிழக நாட்டுப்புற விளையாட்டுகளையும் ஆண்கள் விளையாட்டு, பெண்கள் விளையாட்டு என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பெரும்பாலும் ஆண்கள் விளையாடுவன வீர விளையாட்டுகளாகவே உள்ளன.



Unit 4.indd 79 13-02-2020 20:12:59

## வீர விளையாட்டுகள்

விளையாட்டு என்பதை உவகைச் சுவையில் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறுகிறார். எனவே, விளையாட்டு என்பது, மகிழ்ச்சியைத் தரும் செயல் ஆகும்.

வீர விளையாட்டு, உயிரை ஈடாக வைத்து ஆடப்படுகிறது. நாட்டுப்புற வீரவிளையாட்டாக ஏறுதழுவல், சிலம்பாட்டம், சடுகுடு, இளவட்டக்கல், உரிமரம் ஏறுதல் எனப் பல விளையாட்டுகளைச் சுட்டலாம்.

இவ்வகை விளையாட்டுகள் மனிதனுக்கும் விலங்கிற்கும் இடையில், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் என இரண்டாகப் பிரிப்பர். முதல் வகைக்கு ஏறுதழுவலையும் பாரிவேட்டையும் சான்றாகச் சுட்டலாம். சிலம்பாட்டம், புலிவேடம் முதலியவை இரண்டாம் வகைக்குச் சான்றுகளாகும்.

மன எழுச்சி, குறிக்கோளை அடைதல், தன்னிலை நிறுத்துதல், குழு மனப்பாங்கு, நட்புறவு, உடல் நலம் பேணுதல் போன்ற பண்புகளை விளையாட்டுகள் வளர்க்கின்றன. அவற்றை நம் முன்னோர்கள் உணர்ந்து வாழ்ந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகளாக நம் வீர விளையாட்டுகள் உள்ளன.

## ஏறுதழுவுதல்

மஞ்சுவிரட்டு அல்லது ஏறுதழுவுதல் என்பது தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்று. முல்லைக்கலியில் ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அதனால் இவ்விளையாட்டு, பண்டைக் காலம்முதல் உள்ளது என்பதை அறியலாம். வீரத்தை வெளிப்படுத்தும் இவ்விளையாட்டுகளுள் இது முதன்மையாகக் கருதப்படுகிறது.



**ஏறுதழுவுதல்**

காளையின் கொட்டேறி என்னும் திமிலைப் பிடித்து அடக்குவது சங்க கால முறை. கொம்பைப் பிடித்து முறுக்கி அடக்குவதும் உண்டு. நாணயங்கள் அடங்கிய பையைக் காளையின் கொம்பில் வைத்துக் கட்டிவிடும் பழக்கம் பிற்காலத்தில் தோன்றியது. நாணயத்தைச் சல்லி என்று கூறுவர். அதனால் இவ்விளையாட்டைச் சல்லிக்கட்டு என்றும் அழைப்பர்.

வாடி வாசல், திட்டி வாசல் முதலான பகுதிகளைக் கொண்ட இவ்விளையாட்டு வேலி மஞ்சுவிரட்டு, வாடிவாசல் மஞ்சுவிரட்டு, வடம் மஞ்சுவிரட்டு என வட்டாரத்திற்கு ஏற்றாற்போல் நடத்தப்படுகின்றது.


சிறுதெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையதாகவும் இவ்விளையாட்டைக் கருதுகின்றனர். அம்மை, வைசூரி போன்ற கொடிய நோய்கள், மழையின்மை முதலிய குறைகள் நீக்கப்பட்டால் பொங்கல் நாளன்று சல்லிக்கட்டு விடுகிறோம் என்ற வேண்டுதலின் அடிப்படையிலும் இவ்விளையாட்டு நடத்தப்படுகிறது.

இவ்விளையாட்டில் கலந்துகொள்ளும் காளையைச் சல்லிமாடு என்றழைப்பர். இக்காளையைக் கன்றுப் பருவத்திலிருந்தே சிறு துண்டினைக் காட்டிப் பாய்ச்சலுக்குப் பழக்குவர். இச்செயல் 'உர்ரி காட்டுதல்' என்று அழைக்கப்படுகிறது.

ஏறுதழுவல் விளையாட்டுக்குக் காளையைப் பலவகைகளில் ஒப்பனை செய்வர். கால், கழுத்து முதலிய பகுதிகளில் சலங்கைகள் கட்டப்படும். நெற்றியில் காசுமாலையும் கொம்பில் சிறுவளையமும் அணியப்படும். திமில் பகுதியில் வண்ணப் பொட்டு இட்டும் ஒப்பனை செய்யப்படும். இவ்வாறு ஒப்பனை செய்யப்பட்ட காளையின் கொம்பில் கட்டப்பட்டிருக்கும் சல்லிக்கட்டுத் துணியை மீட்பவரே வெற்றி பெற்றவராவர்.

## சிலம்பாட்டம்

தமிழர்களுடைய நாட்டுப்புறக் கலைகளில் சிலம்பாட்டமும் ஒன்றாகும். சிலம்பு என்னும் சொல் பலபொருள் குறித்த ஒரு சொல்லாக உள்ளது. இங்கு இச்சொல் கம்புகளைக் குறித்து நிற்கிறது. கம்புகளை அடித்து ஒலியெழுப்பும் விளையாட்டுக்குச் சிலம்பு எனப் பெயர். கம்புகளின் ஒலியைத் தவிர இரும்பு ஆயுதங்களின் ஒலியும் இவ்வாட்டத்தின்போது எழுப்பப்படும்.



**சிலம்பாட்டம்**

நேர்த்தியாகக் கம்புகளைச் சுழற்றினால்தான் எதிரியை வீழ்த்த இயலும் என்பதால் போர் முறைகளுக்கு உரிய சில விதி முறைகளும் சிலம்பாட்டத்தில் இடம்பெற்றுள்ளன. உடற்பயிற்சி, தற்காப்பு, போராட்டம் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கொண்டது சிலம்பாட்டம். நடசாரி என்று கூறப்படும் ஓலைப் பட்டயச் செய்தியில் சிலம்பாட்டத்தின் தோற்றம் பற்றிக் கதையாகக் கூறப்பட்டுள்ளது.

கம்பை வேகமாகச் சுழற்றுவதிலும் முன்பின் திரும்பி ஆடுவதிலும் கலை நயத்தைப் புகுத்தி உருவெடுக்கிறது இச்சிலம்பாட்டம். இவ்வாட்டத்தில் பலவிதமான சுவடுமுறைகள் கையாளப்படுகின்றன. உடலிலுள்ள வர்ம நாடிகளை நோக்கி அடிக்கும் சுவடுமுறைக்கு தட்டுவர்மச் சுவடு என்று பெயர்.

இதில் அடிச்சுப்பிரிவு, பூட்டுப்பிரிவு ஆகிய விளையாட்டு முறைகளும் உள்ளன. ஒருவர் இடம் பார்த்து அடிப்பதும், அவ்வடியை இன்னொருவர் தடுப்பதும் அடிச்சுப்பிரிவு ஆகும். ஒருவர் கைகொண்டு அடுத்தவரைப் பூட்டிப் பிடிப்பதும் அப்பூட்டிலிருந்து பிடிபட்டவர் தம்மை விடுவித்துக்கொள்வதும் பூட்டுப்பிரிவாகும்.

குமரி மாவட்டத்தில் சிலம்பாட்டம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. விழாக்களில் சிலம்பாட்டம் ஆடி மகிழ்வர். அப்பகுதியில் சிலம்படி ஆசான்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். தமிழரின் வீரத்திற்கும் நுட்பமான செயல்திறனுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது இச்சிலம்பாட்டம் ஆகும்.

## சடுகுடு



சடுகுடு

பசுவைக் கவர்ந்து வருவதும், கவர்ந்து வந்த பசுக்களை மீட்டு வருவதுமான வெட்சி, கரந்தை



Unit 4.indd 81 13-02-2020 20:13:00

ஆகிய திணைகளில் வரும் போர் முறையின் தொடர்ச்சியாகச் சடுகுடுவைக் குறிப்பர். இவ்விளையாட்டு, பாண்டிய நாட்டில் குட்டி என்றும் சோழ நாட்டில் பளிச்சப்பிளான், பலீன் சடுகுடு என்றும் தென் சோழ நாட்டில் சடுகுடு என்றும் அழைக்கப்படுகிறது.

மூச்சுப் பிடித்துக் கொண்டு பாடிச் சென்று மீள்வதும், பாடி வருபவரைப் பலரும் சூழ்ந்து பிடிப்பதும் பிடிபட்டவர் தம்மை விடுவித்துக்கொள்வதும் இவ்விளையாட்டின் திறம் ஆகும். மூச்சுப்பிடிப்பதைப் பாட்டம் என்று அழைப்பர். பாடிச் செல்பவரைக் கொம்பு சுற்றிப் பாடுபவன் என்று சொல்வது உண்டு. பாடிச் செல்லும்போது தனி வீரமும், பிடிக்கும்போது கூட்டு வீரமும் உடையது இவ்விளையாட்டு. கபடி என்று இக்காலத்தில் அழைக்கப்படுகிறது.

பிடிபட்டவரை விலக்காமலே பிடிபட்டவரின் எண்ணிக்கையை மட்டும் ஆட்ட இறுதியில் கணக்கில் கொள்ளும் ஆட்டத்தைச் சஞ்சீவி ஆட்டம் என்றும் பிடிபட்டவரைக் கடைசிவரை சேர்க்காமல் ஆட்டத்தை முடித்துக்கொள்வதை ஆடாது ஒழியும் ஆட்டம் என்றும், கூறுவர்.

இவ்விளையாட்டில் இடைக்கோடு மட்டும் போட்டு விளையாடும் பழக்கம் பாண்டிய நாட்டில் உள்ளது. பின்கோடு, பக்கக்கோடு, நடுகோடு முதலான அரங்க அமைப்பில் விளையாடும் பழக்கம் கொங்கு நாட்டில் காணப்படுகிறது.

**பட்டான் பட்டான் என் தம்பி**
**படையிலே பட்டான் என் தம்பி**
**நெத்தி மேலே குண்டு வச்சு நேரே வாடா என் தம்பி**
**என் தம்பி என் தம்பி....**
**பட்டாருக்காய் படையெடுத்து வாரேன்**
**துட்டாளெல்லாம் தூரப்போ தூரப்போ...**

எனப் பாடிச் செல்லும் சடுகுடு பாடல்கள் நிறைய உள்ளன.

## இளவட்டக்கல்

பண்டைய மனிதன் குகைகளில் வாழ்ந்தபோது கல்லைத் தூக்குதல், நகர்த்துதல் முதலிய பழக்கங்கள் நாளடைவில் வாழ்க்கையோடு இணைந்த பழக்கங்களாக மாறியிருக்கலாம். பின் நாகரிக வளர்ச்சியில் உடல்திறனை வெளிப்படுத்தும் விளையாட்டாக அவை மாறியிருக்கலாம் என்பர்.



**இளவட்டக்கல்**

இவ்விளையாட்டு, தான் விரும்பிய பெண்ணை மணப்பதற்காக ஆடப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் வீரத்தை வெளிப்படுத்தும் ஆட்டமாக மாறியிருக்கிறது. திருவிழாக்களின்போது ஊர்ப்பொது இடத்தில் இது நடத்தப்படும்.

இவ்விளையாட்டில் கலந்துகொள்பவர் இளவட்டக் கல்லைத் தலைக்குமேல் தூக்கிப் பிடித்துப் பின் கீழே போட வேண்டும். அப்படிச் செய்பவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவர். இப்போட்டிக்குக் கிராமத்துப் பெரியவர்கள் நடுவராக இருப்பர்.

மணமகனாக வருபவருக்குப் பொன், பொருள் போன்ற ஆடம்பரப் பொருள்களைவிட உடல் திறன் இன்றியமையாதது என்பதை இவ்விளையாட்டு வெளிப்படுத்துகிறது எனலாம்.

## உரிமரம் ஏறுதல்

பட்டை உரிக்கப்பட்ட மரத்தையே உரிமரம் என்பர். இவ்வுரிமரத்தில் ஏறி விளையாடுவதே



Unit 4.indd 82 13-02-2020 20:13:00

உரிமரம் ஏறுதல் என்று அழைக்கப்படுகிறது. இவ்விளையாட்டுக்கு எல்லா மரங்களையும் பயன்படுத்துவது இல்லை. கைப்பிடிக்கு அடங்காது பருத்திருக்கும் உதியமரத்தை மட்டுமே பயன்படுத்துவர். பட்டை உரிக்கப்பட்ட மரம் வழுவழுப்பாக இருக்கும். ஏற்கெனவே வழுவழுப்பாக இருக்கும் அம்மரத்தில் விளக்கெண்ணெய் தடவப்பட்டு மேலும் வழுவழுப்பானதாக மாற்றப்படும். இவ்வாறு மாற்றப்பட்ட மரத்தின் உச்சியில் பரிசுப் பொருளையும் கட்டி நட்டுவிடுவர். இம்மரத்தில் ஏறி உச்சியில் இருக்கும் பரிசுப் பொருளைக் கைப்பற்றுபவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவர்.



**உரிமரம் ஏறுதல்**

செங்குத்தான பாறைகள்மீது ஏறுதல், வழுக்குப்பாறைமேல் ஏறுதல் முதலிய பயிற்சிகளை உடையவர்கள், மலைவாழ் மக்கள் ஆவர். இவர்கள் சமவெளிப் பகுதியில் வாழ நேர்ந்தபோது இப்பயிற்சிகள் அவசியமில்லாமல் போகவே விழாக்காலங்களில் உடல்திறனை வெளிப்படுத்தும் வீர விளையாட்டாக இது மாறியது. இவ்விளையாட்டு மதுரை மாவட்டத்தில் பரவலாக விளையாடப்படுகிறது. தற்போது பெரிய இரும்புக் குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும், அறிவுக் கூர்மையை வெளிப்படுத்தும் விளையாட்டுகளும் வீர விளையாட்டுகளாகவே கருதப்படுகின்றன. கட்ட விளையாட்டு, பதினைந்தாம் புலி, நட்சத்திர விளையாட்டு, திரிகுத்து, பொம்மைசீட்டு, மூணு கட்டை, பானை உடைத்தல், உறிப்பானை விளையாட்டு போன்றவை இவ்விளையாட்டுகள் ஆகும்.

## கில்லி

இவ்விளையாட்டு தமிழக நாட்டுப்புற விளையாட்டில் ஒன்றாகும். இதைச் சிறுவர்களும், ஆடவர்களும் விளையாடுவர். இது கில்லி, புல்லுக்குச்சி, கில்லிதாண்டு, சில்லாங்குச்சி எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. சிறிய குச்சி கில்லி எனவும் பெரிய குச்சி தாண்டல் எனவும் கூறப்படும். இவ்விளையட்டில் குறைந்தது இருவர் இருப்பர். விளையாடுவோர் அதிகமாக இருப்பின் அணியாகப் பிரிந்து விளையாடுவர்.

இவ்விளையாட்டில் இரண்டு குச்சிகள் பயன்படுத்தப்படும். ஒரு முழம் நீளத்தில் ஒரு குச்சியும் ஒரு சாண் நீளத்தில் மற்றொரு குச்சியும் இருக்கும். சிறிய குச்சியின் இரண்டு முனையும் கூர்மையாக்கப்பட்டிருக்கும். பெரிய குச்சியின் ஒரு முனை மட்டும் கூர்மையாக்கப்பட்டிருக்கும். நிலத்தில் இரண்டு விரல் இடை அளவிற்குச் சிறிய பள்ளம் பறிக்கப்படும். அப்பள்ளத்தின் நடுவில் குறுக்காகக் கில்லி வைக்கப்படும். இவ்வாறு வைத்த குச்சியைப் பெரிய குச்சியைக் கொண்டு தள்ளிவிடுவர். தள்ளிவிடப்படும் கில்லியை எதிர் அணியினர் எவரும் பிடித்துவிட்டால், கில்லி தள்ளுபவர் விளையாட்டில் தோற்றவராவர் அல்லது கில்லி வைக்கப்பட்ட குழியிலிருந்து தாண்டி மிதிக்கும் தொலைவில், கில்லி விழுந்திருந்தாலும் விளையாட்டில் தோற்றதாகக் கருதப்படும். கில்லி விழுந்த இடத்திலிருந்து எதிர் அணியினர் கில்லியைப் பறிக்கப்பட்ட குழியை நோக்கி எறிவர். அந்தக் கில்லி குழியில் விழுந்தாலும் எதிர் அணியினர் தோற்றவர் ஆவர். இதன் பின்பு கில்லி மூன்று முறை அடிக்கப்படும். அதன் தொலைவு கில்லிக் குழியிலிருந்து தாண்டலால் அளவிடப்படும். அதுவே அவ்வணியினர் எடுக்கும் புள்ளிகளாகும்.

இவ்விளையாட்டை விளையாடப் பரந்த திடல் வேண்டும். மேலும், இதுபோன்ற பலவிளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்தார்கள். அவை, கோலி, பேந்தா, அஞ்சல குஞ்சம், நொண்டி விளையாட்டு, சில்லி, தாயம், பரமபதம், ஆடுபுலியாட்டம், பூப்பறித்தல், பாண்டியாட்டம், அச்சாங்கல், கண்ணாம்மூச்சி, பல்லாங்குழி போன்றவையாகும்.



Unit 4.indd 83 13-02-2020 20:13:00

## பச்சைக்குதிரை

இவ்விளையாட்டு, சிறுவர்கள் ஒத்த பருவத்தினரோடு நிலா வெளிச்சத்தில் விளையாடும் விளையாட்டாகும். இதன் முதல்படி பிறருடைய காலைத் தாண்டுவதில் தொடங்கும். அதனால், இந்த விளையாட்டைக் கால்தாண்டி விளையாட்டு என்று அழைப்பர். குனிந்து இருப்பவர் படிப்படியாகத் தம்நிலையை உயர்த்துவதால், தாண்ட வேண்டிய உயரம் கூடிக் கொண்டேபோகும்.



**பச்சைக்குதிரை**

## கால் தாண்டல்

ஒரு கால் பாதம், ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டு கால் பாதம், இரண்டு பாத உயரத்தின் மேல் ஒரு சாண், இரண்டு பாத உயரத்தின் மேல் இரண்டு சாண் எனக் கால் தாண்ட வேண்டிய உயரம் உயர்ந்து கொண்டே போகும்.

## ஆள்தாண்டல்

கால் தாண்டலுக்குப் பின் ஆள்தாண்டல் நடைபெறும். இதில் குனிந்துகொண்டு நிற்பவரை, அவர் முதுகில் கையை ஊன்றித் தாண்ட வேண்டும். குனிந்து கொண்டு நிற்பவர் தலையைத் தொங்க விட்டுக் கொண்டு குனிந்திருக்க வேண்டும். தலையை உயர்த்தினால் தலையைத் தட்டிக் குனியச்செய்வர். தாண்டுபவர் தம் இருகால்களையும் அகற்றி ஒரு கால் அவரது தலையையும் மற்றொரு கால் அவரது இடுப்பையும் தாண்டி வருமாறு தாண்டுவர். தாண்டுபவர் ஓடிவந்து தாண்ட இயலாது.

கால் கட்டை விரலைப் பிடித்துக் கொண்டு நிற்றல். கணுக்காலைப் பிடித்துக் கொண்டு நிற்றல் (கரண்டை), முழங்காலைப் பிடித்துக் கொண்டு நிற்றல்(மோளி), தொடையைப் பிடித்துக் கொண்டு நிற்றல், கைகளைக் கட்டிக் கொண்டு அல்லது கும்பிட்டுக் கொண்டு குனிந்து நிற்றல் என ஆள் தாண்டியின் உயரம் படிப்படியாக உயரும்.

## குனிதல்

தாண்டுபவர், தாம் தாண்டி முடிந்த பின்னர், பிறர் தாண்டுவதற்காக முறைப்படி அனுமதிக்க வேண்டும்.

## தவறியவர்

ஒருவர் எந்த நிலையில் தாண்ட இயலவில்லையோ, அந்த நிலையிலிருந்து தாண்டும் வாய்ப்பை இழப்பார். எனினும், அவர் பிறர் தாண்டுவதற்குக் குதிரை ஆகி நிற்க வேண்டும்.

## நிறைவுரை

தமிழகத்தில் அறுபத்து நான்கு முதன்மைக் கலைகள் இருந்தன என்பதை 'ஆயகலைகள் அறுபத்து நான்கு' என்ற கம்பரின் கூற்றின் மூலமாக அறிய முடிகிறது. இக்கலைகளுள் ஐந்தனை மட்டும் அழகு கலைகள் அல்லது நுண்கலைகள் என்பர். பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களே தமிழகக் கட்டடக் கலைக்குச் சிறந்த சான்றுகளாகத் திகழ்ந்தன என்பதை அறியமுடிகிறது.

தமிழகத்தில் மிக உயரமான விமானம் சோழர் காலத்திலும், மிக உயர்ந்த கோபுரம், விஜயநகர காலத்திலும், நாயக்கர் காலத்திலும் கட்டப்பட்டுள்ளன என்பதைக் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

சிற்பக் கலையின் வகைகளையும், சிற்பங்கள் வடிக்கப் பயன்படுத்திய பொருள்களையும் அறியமுடிகிறது. சுதைச் சிற்பங்கள் முதலில் தோன்றின என்பதையும் பல்லவர் காலத்தில் நளினத்துடன் கூடிய அழகிய சிற்பங்களும், நாயக்கர் காலத்தில் யானை, குதிரை போன்ற புராணத் தொன்மங்களும் வடிக்கப்பட்டுள்ளன என்பதையும் அறிய முடிகிறது.

பழங்கால ஓவியங்களையும், ஓவியத்தின் சிறப்புகளையும் அவர்கள் பயன்படுத்திய



Unit 4.indd 84 13-02-2020 20:13:00

வண்ணங்களையும் காலந்தோறும் ஓவியக்கலையில் ஏற்பட்ட வளர்ச்சி நிலைகளையும் காண முடிகிறது.

மனித வாழ்க்கையில், இசை இரண்டறக் கலந்துள்ளது என்பதையும் இசைக்கருவிகளின் வகைகளையும், இசை நூல்களின் வகைகளையும், இசைத்தூண்கள் பற்றியும் தமிழர் கலைகள் வாயிலாகக் கண்டறிய முடிகிறது. நாட்டுப்புறக் கலைகளுள் நாட்டுப்புற விளையாட்டுகளின் பழைமையையும் பெருமையையும் அறிய முடிகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

**பண்ணாங்குழி**

**நெல் குத்தும் பண்ணைபோல் வட்டமான பள்ளம் அல்லது குழி வெட்டி, அதில் கற்களை இட்டு ஆடும் ஆட்டம், பண்ணாங்குழி. பண்ணை என்பது, பள்ளம். பண்ணை பறித்தல் என்பது, குழி தோண்டுதல்.**

**பண்ணாங்குழி என்பதைப் பல்லாங்குழி, பள்ளாங்குழி, பன்னாங்குழி என்னும் பெயர்களால் வழங்குகின்றனர். பெரும்பாலும் பதினான்கு குழிகளை வைத்து ஆடுவதால் பதினாங்குழி, பன்னாங்குழி எனத் திரிந்ததாகக் கூறுவர். பன்னான்கு என்பதே இலக்கிய வழக்காக இருப்பதனால், பண்ணாங்குழி அல்லது பள்ளாங்குழி என்பதே திருந்திய வடிவமாகும். இவ்விளையாட்டை இருவர் ஆடுவர். நிலத்தில் சமமான இரு படுக்கை வரிசையாகத் தோண்டப்பட்ட குழிகளுள் கழற்சிக்காய்/ புளியங்கொட்டை/ கூழாங்கற்கள் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை ஐந்தைந்தாய் இட்டு விளையாடுவர்.**

**–தமிழ்நாட்டு விளையாட்டுகள், ஞா. தேவநேயன், 1952.**

## மதிப்பீடு

ABRIKD

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. “ஆயகலைகள்அறுபத்துநான்கனையும் ஏயஉணர்விக்கும் என்அம்மை” என்று கூறியவர்----

அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர் இ) சாத்தனார் ஈ) திருத்தக்கதேவர்

2. கீழ்க்காணும் கலைகளுள் நுண்கலை அல்லாதது எது?

அ) கட்டடக்கலை ஆ) சிற்பக்கலை இ) பரதக்கலை ஈ) ஓவியக்கலை

3. “நூலோர் சிறப்பின் முகில்தோய் மாடம்” என்று கூறியவர் ------

அ) புகழேந்தி ஆ) இளங்கோவடிகள் இ) சாத்தனார் ஈ) நாதகுத்தனார்

4. பழங்காலத்தில் கட்டடங்கள் மரத்தால் கட்டப்பட்டவை என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கோயில் அமைந்துள்ள இடம்

அ) திருபுவனம் ஆ) தாராசுரம் இ) சிதம்பரம் ஈ) கும்பகோணம்



Unit 4.indd 85 13-02-2020 20:13:00

5. முதன்முதலில் மகேந்திரவர்மனால் அமைக்கப்பெற்ற குடைவரைக்கோயில் ---------------

அ) மாமண்டூர் ஆ) மண்டகப்பட்டு இ) திருச்சி ஈ) வல்லம்

6. பின்வருவனவற்றுள் இந்தியக் கோவில் கட்டடக்கலை பாணியைச் சாராதது எது?

அ) நாகரம் ஆ) வேசரம் இ) காந்தாரக்கலை ஈ) திராவிடம்

7. கீழ்க்காண்பனவற்றுள் சரியான விடைக்குறிப்பைத் தெரிவு செய்க

அ) சிற்பக்கலைஞர் - 1. துகிலிகை

ஆ) வாயிற்காவலர்கள் - 2. மண்ணீட்டாளர்கள்

இ) சித்திரம் எழுதும் கோல் - 3. புனையாஓவியம்

ஈ) கோட்டோவியம் - 4. துவாரபாலகர்கள்

அ) அ-2 ஆ-4 இ-1 ஈ-3 ஆ) அ-4 ஆ-2 இ-3 ஈ-1

இ) அ-3 ஆ-1 இ-4 ஈ-2 ஈ) அ-1 ஆ-3 இ-2 ஈ-4

8. கீழ்க்காண்பனவற்றுள் பல்லவர்காலக் குடைவரைக் கோவில் இடம்பெறாத ஊர் எது?

அ) வல்லம் ஆ) மாமண்டூர் இ) பல்லாவரம் ஈ)பிள்ளையார்பட்டி

9. 'தென்னகத்து எல்லோரா' என அழைக்கப்படும் கோவில் அமைந்துள்ள இடம் ------

அ) திருமயம் ஆ) கழுகுமலை இ) திருப்பரங்குன்றம் ஈ) குன்றக்குடி

10. 'தென்னகத்துமேரு' என அழைக்கப்படும் கோவிலைக் கட்டியவர் ----------

அ) ராஜேந்திரசோழன் ஆ) ராஜராஜசோழன் இ) குலோத்துங்கன் ஈ) விஜயாலயசோழன்

11. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத இணை எது?

அ) சோழர்கள் - தஞ்சாவூர் ஆ) பல்லவர்கள் - காஞ்சிபுரம்

இ) பாண்டியர்கள் - மதுரை ஈ) நாயக்கர் - புதுக்கோட்டை

12. கீழ்க்காண்பனவற்றுள் சரியான விடைக் குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

1) முதலாம் இராஜராஜசோழன் - கங்கைகொண்டசோழபுரம்

2) முதலாம் இராஜேந்திரசோழன் - பிரகதீஸ்வர்கோவில்

3) மூன்றாம் குலோத்துங்கன் - திருபுவனம்கம்கரேஸ்வர்கோவில்

4) விஜயாலயசோழன் - நார்த்தாமலை கோவில்

அ) 1, 3 சரியானவை ஆ) 3, 4 சரியானவை இ) 1, 2 சரியானவை ஈ) 1, 4 சரியானவை

13. முல்லை நிலத்தவரின் முதன்மை இசைக்கருவி

அ) மத்தளம் ஆ) வேய்ங்குழல் இ) யாழ் ஈ) உருமி

14. கீழ்வருவனவற்றுள் பொருந்தாததைக் கண்டறிக.

அ) ஓவியவல்லோன் ஆ) கைவினைஞர்

இ) கண்ணுள்வினைஞர் ஈ) வட்டிகைச்செய்தி



Unit 4.indd 86 13-02-2020 20:13:00

15. ஏழிசைகளுள் ---------------- என்னும் இசையே இசைவளர்ச்சிக்கு ஆதாரமானது என்பர்.

அ) குரல் ஆ) துத்தம் இ) விளரி ஈ) தாரம்

16. பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்க.

அ) பாண்டரங்கம் - முருகன் அவுணரை வென்றபோது ஆடிய ஆடல்.

ஆ) அல்லியம் - சிவபெருமான் முப்புரத்தை எரித்தபின்னர் நான்முகன் காணும்படி ஆடியஆடல்

இ) குடைக்கூத்து - கண்ணன் யானையின் தந்தத்தை ஒடித்ததைக் காட்டும் ஆடல்

ஈ) துடி - சூரபதுமனை வென்றபிறகு கடலினை மேடையாகக் கொண்டு முருகன் ஆடிய ஆடல்

17. சிற்பக்கலையின் தோற்றுவாயாகக் கருதப்படுபவை

அ) கற்றளிகள் ஆ) குடைவரைகள் இ) நடுகற்கள் ஈ) மண்டபங்கள்

18. தமிழகத்தில் அகழாய்வு மேற்கொள்ளப்படாத இடம்

அ) தாராசுரம் ஆ) அரிக்காமேடு இ) கொற்கை ஈ) உறையூர்

19. தமிழகத்தில் மிகஉயர்ந்த விமானத்தை உடைய கோவில் ----------

அ) கங்கைகொண்டசோழபுரம் ஆ) தஞ்சைப் பெரியகோயில்

இ) திருவில்லிபுத்தூர்ஆண்டாள்கோயில் ஈ) திருவரங்கம் அரங்காநாதர்கோயில்

20. கோவிலில் விமானம் என்பது

அ) அர்த்தமண்டபத்தின் மீது கட்டப்படும் அமைப்பு

ஆ) கருவறையின் மீது கட்டப்படும் அமைப்பு

இ) மகாமண்டபத்தின் மீது கட்டப்படும் அமைப்பு

ஈ) முகமண்டபத்தின் மீது கட்டப்படும் அமைப்பு

21. கற்றளி என்பது

அ) செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடம்

ஆ) கருங்கற்களால் கட்டப்பட்ட கட்டடம்

இ) செங்கற்கள் மற்றும் கருங்கற்களால் கட்டப்பட்ட கட்டடம்

ஈ) பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட கட்டடம்

22. இந்தியாவில் ஒரேகல்லால் ஆன மிகப்பெரிய நந்தியின் சிற்பம் அமைந்துள்ள இடம்

அ) கங்கைகொண்டசோழபுரம் ஆ) திருவதிகை

இ) லெபாக்ஷி ஈ) தஞ்சைப்பெரியகோவில்



Unit 4.indd 87 13-02-2020 20:13:00

## குறுவினா

1. ஓவியம் - சொற்பொருள் விளக்கம் தருக.
2. புனையாஓவியம் என்றால் என்ன?
3. இசைக்கருவிகளின் வகைகள் யாவை?
4. சங்கஇலக்கியங்கள் கூறும் ஐவகைப்பண்கள் யாவை?
5. பதினோர்ஆடல் வகையில் விழுந்தாடும் வகையை பட்டியலிடுக.
6. ஜல்லிக்கட்டு – சொற்பொருள் விளக்கம் தருக.
7. தமிழகத்தில் அகழாய்வு நடைபெற்ற இடங்கள் யாவை?

## சிறுவினா

1. அழகுக்கலைகளை மயிலை சீனி. வேங்கடசாமி எவ்வாறு வகைப்படுத்தியுள்ளார்?
2. இந்தியக்கோவில் கட்டடக்கலையை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
3. பாண்டியர்காலக் குடைவரைக் கோவில்கள் காணப்படும் இடங்கள் யாவை?
4. நாயக்கர் காலக் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டுத் தருக.
5. சுதை என்பதற்கு அ. தட்சிணாமூர்த்தி தரும் விளக்கம் யாது?
6. பிரதிமைகள் – வரையறு.
7. சித்தன்னவாசல் ஓவியங்கள் குறிப்புத் தருக.
8. தஞ்சாவூர் ஓவியத்தின் சிறப்புகள் யாவை?
9. குரவைக்கூத்து – குறிப்புத்தருக.
10. மா. இராசமாணிக்கனார் பட்டியலிடும் மொழிபெயர்க்கப்பட்ட நடனநூல்கள் யாவை?
11. நாட்டுப்புற விளையாட்டாக எவற்றை எல்லாம் சுட்டலாம்?
12. இசைநூல்கள் பற்றி அடியார்க்கு நல்லார் கூறுவன யாவை?
13. இளவட்டக்கல் பற்றி நீவிர் அறிவன யாவை?
14. உரிமரம் ஏறுதல் – குறிப்பு வரைக.
15. பல்லவர்காலச் சிற்பத்திற்கும் சோழர்காலச் சிற்பத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?


## நெடுவினா

1. சோழர்காலக் கோவில் கட்டடக் கலைக்கும், விஜய நகரக் கட்டடக் கலைக்கும் உள்ள வேறுபாடுகளை ஒப்பிட்டு ஆய்க.
2. தஞ்சாவூர் ஓவியங்கள் இன்றளவும் போற்றுப்படுவதற்கான காரணங்களை விளக்குக.
3. நின்றாடலில் இடம்பெற்றுள்ள ஆடல்வகைகளை விளக்குக.
4. பழந்தமிழர் வீரவிளையாட்டுகளில் ஏறுதழுவுதலின் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.
5. இசைக்கருவிகளை வகைப்படுத்தி உதாரணத்துடன் விளக்குக.
6. சிலப்பதிகாரம் கூறும் பதினோரு வகை ஆடல்களின் பெயர் - விளக்கம் தருக.

## இணையச்செயல்பாடு

# கலைகள்

நம் பண்பாட்டின் தனிச்சிறப்புமிக்க கலைகளை அறிவோமா!




### படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி tamilvu என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்க.
- பழங்காலக் கட்டடக்கலை, பிற்காலக் கட்டடக்கலை, பல்லவர், சோழர் கோவிற்கலை போன்ற தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் தேவையானதைத் தேர்வுசெய்து அதன் சிறப்புகளை அறிக.
- எடுத்துக்காட்டாக, கோவிற்கட்டடக்கலை நுட்பங்கள் என்பதைத் தேர்வு செய்து, கீழ்ப்பகுதியில் உள்ள பாடஅமைப்பைச் சொடுக்கியதும் நிலஅமைப்பு, கோபுரம், ஆலயவடிவம் போன்றவைத். தோன்றும் அவற்றை அறிந்துகொள்க.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :







கலைகள் இணையப்பக்கத்தின் உரலி

*http://www.tamilvu.org/ta/courses-degree-d051-d0511-html-d0511ind-21912*

B148_11_EIC_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



Unit 4.indd 89 13-02-2020 20:13:01